# சித்திரவதை நிறைந்த உலகம்



அனைத்துலக மன்னிப்புக்கழக அறிக்கை - 1978

1977 ற்குரிய நோபில் அமைதிப்பரிசை
அனைத்துலக மன்னிப்புக் கழகத்திற்கு வழங்கப்பட்டது.

1978ல் மனித உரிமைகள் அனைத்துலகப் பிரகடனத்தின் 30ம் ஆண்டு நிறைவு விழாவின்போது ஐக்கிய நாடுகள் அவையில் மனித உரிமைகள் பரிசு அனைத்துலக மன்னிப்புக் கழகத்திற்கு வழங்கப்பட்டது.

*இலங்கைக் கிளையின் முகவரி:*

**அனைத்துலக மன்னிப்புக் கழகம்**

**79/15, கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர மாவத்தை,**

**கொழும்பு 7.**

# சித்திரவதை நிறைந்த உலகம்

(அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் 1978 அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள்

வெளியீடு

அனைத்துலக மன்னிப்புக்கழக இலங்கைக் கிளை

*Copyright*

**Amnesty International Publications**

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted, in any form or by any means, electronic, machanical photocopying, recording and / or otherwise, without the prior permission of the publishers.

## ஆசிரியர் குறிப்பு

320 பக்கங்கள் கொண்ட ஆவணமாக விளங்கும் அனைத்துலக மன்னிப்புக் கழக அறிக்கை 1978ல் இருந்து இச்சிறு நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நாட்டு வாசகர்களுக்கு எது சிறப்பு ஈடுபாடாய் இருக்குமோ அதனைப் பிரித்தெடுத்து இங்கு தந்துள்ளோம். அத்துடன் பல மூலங்களிலிருந்து பெற்ற படங்களையும் இங்கு சேர்த்துள்ளோம். (அனைத்துலக மன்னிப்புக் கழக அறிக்கை 1978ல் படங்கள் எதுவும் இல்லை) அனைத்துலக மன்னிப்புக் கழக 1978ன் முழுத் தொகுப்பும் ஆங்கிலத்திலேயே மட்டும் இருக்கிறது. இதன் விலை ரூ. 50/- இதனை 6, சுதந்திர சதுக்கம் கொழும்பு 7. என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

## நன்றி நவில்கிறோம்

நூலின் முகப்புப் படமும், மற்றும் பக்கங்களில் இருக்கும் படங்களும் இலங்கை மன்றக் கல்லூரியின் மனித உரிமைகள் குழுவினால் அனைத்திலங்கை அடிப்படையில் நடாத்தப்பட்ட பொருட் காட்சியில் பரிசு பெற்றோரின் படங்களே இங்கு மீள வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் ஏறக்குறைய 7,000 கல்லூரிகள் கலந்துகொண்டன. மனித உரிமைகள் பற்றி அனைத்துலகப் பிரகடனத்தில் வெளிவந்த எந்தவொரு கட்டுரையின் பொருளையும் பிரதிபலிக்கும் படங்கள் இடம்பெறலாம் என விதிக்கப்பட்டது.

கொழும்பு 7, 27, சுதந்திர சதுக்கத்திலுள்ள இலங்கை மன்றக் கல்லூரி மனித உரிமைகள் நிலையத்திற்கே இப்படங்கள் தனி உரித்துடையனவையாகும். இந்நிலையத்திடம் இருந்து எழுத்தில் இசைவு பெற்றாலன்றி இப்படங்களை மீளப் பதிப்பிடக் கூடாது.

மேற்குறித்த படங்களைப் பயன்படுத்த இசைவு தந்த இலங்கை மன்றக் கல்லூரியின் மனித உரிமைகள் நிலையத்திற்கு எமது நன்றி.

அட்டைப் படம்

இலங்கை மன்றக் கல்லூரியின் மனித உரிமைகள் நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட் படக்காட்சியில் வைக்கப்பட்ட படமே இந்நூலின் முகப்புப்படம். (எமது நன்றி நவின்ற பிரிவைப் பார்க்கவும்)

இப்படம் மாவனல்லாவிலுள்ள கா/மாயுரபாத மகா வித்தியாலயத்தில் பயிலும் சி. கே. ஆர். ரணசிங்காவினால் வரையப்பட்டது. மனித உரிமைகள் அனைத்துலகப் பிரகடனத்தின் உறுப்புரை 7ன் கருத்தை உள்ளடக்கியதே இப்படம்.

# முகவுரை

**தோமஸ் கமாவேக், தலைவர், அனைத்துலக நிறைவேற்றுக் குழு**

அனைத்துலக மன்னிப்புக் கழகம் ஆற்றல் மிக்க ஒரு இயக்கமாகும். இருபது ஆண்டுக்களுக்கிடையில் அனைத்துலக அமைப்பாக வளர்ந்துள்ள இவ்வியக்கம் நூறுக்குமேற்பட்ட நாடுகளில் உறுப்புரிமை பெற்றுள்ளது. குறிப்பாக கடந்த இரண்டு மூன்று ஆண்டுக்களுக்கிடையில் இதன் உறுப்புரிமையிலும், நடவடிக்கைகளிலும் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. பல நாடுகளின் பொதுமக்களிடம் இரக்க உணர்வினை இவ்வியக்கம் பெற்றுள்ளதுடன் மிக உயர் மட்டத்தில் அன்பளிப்புக்களையும், பரிசில்களையும் பெற்றுப் பெருநிலை அடைந்துள்ளது.

இது பெற்றுள்ள இச்சிறப்பு, இதற்குச் சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது. அனைத்துலக மன்னிப்புக் கழகத்தைச் சுற்றி உண்மைக்குப் புறம்பான ஒரு கற்பனைப்போக்கு உருவாகியுள்ளது. ஏறக்குறைய எல்லா நாடுகளிலும், ஏறக்குறைய எல்லா வரம்புமீறிய செயல்களுக்கும் எதிராகச் செயற்படவேண்டியது இவ்வமைப்பின் கடமையாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சிலவேளைகளில் எம் தகுதியை மிஞ்சுகின்ற அளவிற்கு நாம் மதிக்கப்படுவதோடு நாம் நிறைவேற்ற முடியாத செயற்பாடுகளும் எம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. எம்மைப் பாதுகாப்பதற்காக மட்டுமன்றி எமது எதிர்காலப் பணியின் முடிவுகளை உறுதிப்படுத்தவும் என்றுமில்லாத வகையில் நாம் யார்? நாம் செய்வது என்ன? என்பதை விளக்குவது ஒரு முக்கிய பண்பாக அமைகிறது.

எல்லா நோக்கங்கட்கும், நன்மை செய்வதுதான் அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் பணியல்ல, மாறாக இவ்வமைப்பிற்கு வரையறை செய்யப்பட்ட ஒரு ஆணை தான் உண்டு. மனச்சாட்சிக் கைதிகளை விடுவிப்பதும், அவர்களைத் துன்புறுத்துவதையும், தூக்கிலிடுவதையும் எதிர்ப்பதுமே இதன் பணியாகிறது. ஆனால் வேலையின்மை பசிபட்டினி அல்லது ஏனைய சமூக நோய்கள் ஆகியற்றில் இது தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. உலகின் நாடுகளால் முப்பது ஆண்டுகட்கு முன்பு நிறைவேற்றப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை ஓங்கி ஒலிக்கச் செய்யும் மேடையாகவே இவ்வமைப்பு விளங்குகிறது. இவ்வெல்லைக்குள் குறிப்பாக குடியுரிமை, அரசியலுரிமைகளை நிலைநாட்டுவதிலேயே அனைத்துலக மன்னிப்புக்கழகம் கவனம் செலுத்துகின்றது.

நாம் பெருமளவான எல்லைப்பரப்பினை உள்ளடக்கவில்லை. இது கொண்டு ஏனைய உரிமைகளின் முக்கியத்துவத்தை நாம் புறக்கணிக்கிறோம் என்பது பொருளல்ல. ஆனால் குறிக்கப்பட்ட எல்லைக்குள்தான் திட்டவட்டமான முடிவுகளை அடையமுடியும் என்பதே எமது நோக்கமாகும்.

உண்மையில் வேறுபட்ட உரிமைகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு. துன்புறுத்தப் படும் மக்கள் தம் குரலை எழுப்பமுடியாத சூழ்நிலை நிலவின் அரசியல், சமூகப், பொருளாதார உரிமைகள் ஆகிய இரண்டும் மீறப்படுகின்றன. பெரும்பாலும் இவை இரண்டிற்குமிடையில் நெருங்கிய தொடர்புண்டு. இவற்றுள் தொழிற்சங்க வாதிகள் சிறையிலிடப்படுவது மிக வெளிப் படையான எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. சிலவேளையில் இவ் விரண்டு உரிமைகளுக்குமிடையில் ஒரு முரண்பாட்டை அல்லது ஒரு வேறுபட்ட தன்மையை உண்டாக்க முயற்சிகள் எடுக்கப்படுவது பற்றி ஏற்கவோ அல்லது விளங்கவோ அனைத்துலக மன்னிப்புக்கழகம் மறுக் கிறது.

மறுபுறம் மக்களின் உரிமைகளுக்கிடையில் அல்லது நாடுகளுக் கிடையில் வேறுபாடு இருப்பது பற்றியோ அல்லது மறுபுறம் தனி ஆட் களின் மனித உரிமைகளுக்கிடையில் வேறுபாடு இருப்பதுபற்றியோ நாம் ஏற்க ஆயத்தமாக இல்லை. பல வேளைகளில் "நாடு" "கட்சி" அல்லது "கிளர்ச்சி" போன்ற உயர்தேவைகளின் பேரில் மனித உரிமை கள் மீறப்படுகின்றன. எம் பட்டுணர்விலிருந்து நாம் கண்டவை யாதெ னில் வன்முறையின் உதவி மேற்குறித்த நோக்கங்களுக்குத் தேவை யெனின் இந்நோக்கங்கள் தம்மையே தாம் தாழ்த்திக் கொள்கின்றன என்பதே. எல்லா அரசியல் வேட்கைகளுக்கும் மேலாக அடிப்படை மனித உரிமைகள் பேணப்பட வேண்டும், என்பதோடு எல்லாச் சூழ் நிலைகளிலும் எல்லா வேளைகளிலும் மதிக்கப்படவும்வேண்டும். மேலும் நீண்ட கால அடிப்படையில் நோக்குகையில் எல்லா உரிமைகளினதும் அடிப்படையாக குடியியல், அரசியல் உரிமைகள் விளங்குகின்றன. அத்துடன் மொத்த உரிமைகள் அனைத்திற்கும் இவையே அடிப்படை.

மனித உரிமைகள் என்ற துறையில் இதுவே தனது பங்கு என அனைத்துலக மனிப்புக்கழகம் கருதுகின்றது வரையறை செய்யப்பட்ட ஆணையை இது கொண்டிருப்பினும் தான் பாதுகாக்கும் உரிமைகளுக் கிடையிலும் மற்றும் எல்லா ஏனைய மனித உரிமைகளுக்கிடையிலும் நெருங்கிய தொடர்பு உண்டென்பதை இவ்வமைப்பின் செயலாற்றம் எடுத்துக்காட்டுகின்றது.

பாகுபாடு காட்டாமை எமது கழகத்தின் மற்றுமொரு முக்கிய பண்பாகும். எந்த ஒரு சமயம், அரசியல் கட்சிக் குறிக்கோள், அல்லது பொருளாதார அமைப்பு ஆகியவற்றிற்குச் சார்பாகவோ, எதிராகவோ அனைத்துலக மன்னிப்புக் கழகம் செயலாற்றுது. இங்கு கூட சில குறிப் பிட்ட அடிப்படை உரிமைகளை ஒட்டிய அரசியல் வாழ்வோடுதான் எமது பணியினை நாம் அடக்கியுள்ளோம். உண்மையில் பொது அரசி யல்களுக்கும், நாம் பாதுகாக்க இருக்கும் உரிமைகளுக்குமிடையில் ஒரு தொடர்பு உண்டு என்பதை நாம் உணர்கிறோம். அரசுகள் மாறுகின்ற போது பெரும்பாலும் சிறையில் இடப்படுவதும், சிறையிலிருந்து விடப்

படுவதுமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் இவ்வுண்மை எமது நோக்கில் எதுவித மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. ஆளுப வருக்கு ஏற்றமுறையிலோ, அல்லது ஒரு கோட்பாட்டிற்கு ஏற்ற முறை யிலோ உண்மைகள் சிலவற்றை மறைத்தோ அல்லது ஏனைய சிலவற்றை வலியுறுத்தியோ தீர்ப்பளிக்காது, நாம் நிகழ்ச்சிகளைக் கணக்கில் கொண்டு செயற்படுகின்றோம்.

எப்பொழுதும் அரசுகள் எமது பாகுபாடற்ற தன்மையைப் போற் றுவதாகவோ, அல்லது விளங்கியுள்ளதாகவோ நாம் கருதவில்லை. பல நாடுகளில் நிலவும் உணர்ச்சி மிக்க அரசியல் "அதிர்ச்சிகளை"ப்பற்றியே அனைத்துலக மன்னிப்புக் கழகம் பாடுபடுகின்றதனால் மேற்கூறிய சூழ் நிலை நிலவுவது வியப்பிற்குரியதல்ல. நாம் பாதுகாக்கும் உரிமைகளே தேசிய அரசியல் போராட்டங்களின் முக்கிய விடயங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. எனவே சில வேளைகளில் எதிர்க்கட்சிக்குச் சார் பாகவே எம் அறிக்கைகள் விளங்குகின்றன. நாங்கள் தேவையற்ற வகையில் "தலையிடுவதாகவும்," சில விரும்பத்தகாத துறைகளில் ஈடு படுவோரின் "முகவர்களாகவும்" விளங்குவதாகக் குற்றம் சுமத்தப்பட் டுள்ளோம். எந்த ஒரு பகுதியினரதும் அரசியல் அதிகார போராட் டங்களுக்கு உதவுவது எமது நோக்கமல்லவெனினும் நாம் அறிந்துள்ள உண்மைகள் நன்மைக்கோ தீமைக்கோ சில அரசியல் வாதிகளின் பண்பு களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்காக மிகக் கடுமையான வரம்பு மீறல்களை நாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கமுடி யாது. மிகக்கடுமையான அரசியல் பதட்ட நிலையிற் கூட, மனித உரி மைகளைப் பொறுத்தவரையில் பாகுபாடற்ற தன்மை என்ற பெயரில் அவர்களுக்காகப் போராடாத நிலையை உருவாக்க விரும்பவில்லை.

அரசுகளுடனான எமது தொடர்பு, அடிப்படையில் ஒரே தன்மை யுடையவையே. நாம் நாட நிற்பது ஒரு கலந்துரையாடலே. எம் நோக்கினை நிறைவு செய்யும் முறையில் நாம் எவ்வளவு காலமும் பேசு வதற்கு ஆயத்தமாவுள்ளோம். பேரம் பேசுவது எமது நோக்கமல்ல. நாம் எதையும் "விற்க" விரும்பவில்லை. எமக்களிக்கப்பட்ட ஆணைக் குட்பட்ட நிலையில் கலந்துரையாடல் நடாத்தவும் எமது நிலையையும் எமது விதந்துரைப்புகளையும் உணர்த்த வாய்ப்புக்களையே நாடி நிற்கி றோம். இது எதை எடுத்துக்காட்டுவதென்றால் நாம் அரசுகளுடன் போரிட விரும்பவில்லையென்பதையே. பகிஸ்கரிப்பு செய்வதோ அளிக் கப்படும் உதவிகளை கட்டுப்படுத்துவதோ எமது நோக்கமல்ல. இத் தகைய பொருளாதார அமுக்கங்களை உருவாக்குவது எமக்கு அளிக்கப் பட்ட ஆணைக்குட்பட்டது அல்ல என்பதுடன் எமது செயற்படும் முறைக்கும் ஏற்றதல்ல.

சில வேளைகளில் அரசு சார்பற்ற அமைப்புகளும் தனியாட்களும் கூட பாகுபாடற்ற தன்மையையும் எமது தனித்துவத்தையும் பாது காக்க நாம் எடுக்கும் முயற்சிகளைப் பற்றி உணர்வதில் அவர்களுக்கு

இடர்பாடுகள் இருப்பதை நாம் உணரத்தக்கதாய் இருக்கிறது. ஏனைய
அமைப்புக்களுடன் நாம் ஒத்துழைப்பு வழங்குவதில் சில ஒழுங்குவிதிகள்
எமக்குண்டு. அத்துடன் எமக்கு வழங்கப்படும் ஒவ்வொரு நன்கொடை
யையும் எமது மிகக் கடுமையான சட்டுப்பாடுகளுக்கேற்ப நுணுகி
ஆராய்ந்தபின்பே ஏற்கிறோம். எமது தனித்துவத்தைப் பேணுவதற்
காகவே நாம் இதனைச் செய்கிறோம். இதில் நாம் வெற்றியும் ஈட்டி
யுள்ளோம்.

பாகுபாடற்ற தன்மை நிலைநாட்டப்படவேண்டின் நாம் சரியாக
இருக்க வேண்டியது முக்கியமாகும். தனது அறிக்கைகளின் தப்பான
கருத்துகள் பொய்யான தகவல் அல்லது பிழையான விளக்கங்கள்
நிகழாது இருக்க தனக்குள்ள மட்டுப்படுத்தப்பட்டுள்ள மூலங்களளவில்
உண்மைகளைச் சரிபார்த்திடத் தன் நேரத்தின் பெரும் பகுதியைச் செல
விடுகின்றது. தவறுகளை நாங்கள் செய்திருக்கிறோம். ஆனால் அவை
நல்லவேளையாக மிகக் குறைவுடையதாக இருப்பதோடு திருத்தவும்
பட்டுள்ளன. உண்மைகள் பற்றி ஏற்பட்டுள்ள தவறுகளைத் திருத்த
அனைத்துலக மன்னிப்புக் கழகம் என்றும் ஆயத்தமாய் உள்ளது.

உண்மையில், வெளியிடாத பலவற்றுக்காக அனைத்துலக மன்னிப்
புக்கழகம் தாக்கப்பட்டதேயன்றி வெளியிட்டதற்காகவல்ல. ஒரு நாடு
பற்றியோ அல்லது நாடுகளின் குழு ஒன்று பற்றியோ மிகச் சிறியதாக
அல்லது மிகக் கூடியதாக அறிக்கைகள் வெளியிட்டு சமநிலையை காட்ட
வில்லையென சிலவேளைகளில் நாம் கண்டிக்கப்பட்டுள்ளோம்.

சமநிலையோடு செயலாற்றுகிறோம் என்பதற்காக சமநிலையை உரு
வாக்குவது செயற்கையாக அமையும். உண்மை நிலைகளுக்கேற்பவே
நாம் செயற்படுகிறோம். ஒருசில நாடுகளில் மனித உரிமைகள் மிகக்
கடுமையாக மீறப்பட்டிருக்கையில் மற்றைய சில நாடுகளில் மிகச் சிறி
தளவே இவை மீறப்பட்டிருப்பின் இவ்வொவ்வொரு பகுதியிலும் எமது
மூலவளங்களில் ஐம்பது சதவீதத்தை தனித்தனியே செலவழிக்கமாட்
டோம். இன்று உலகம் இருக்கின்ற போக்கில் வேறுபட்ட அரசியல்
அமைப்பு கொண்ட கண்டங்களிலும், நாடுகளிலும் மனித உரிமைகளுக்
காக பாடுபடும் ஒரு அமைப்பு பொறுப்புணர்ச்சியுடன் பாகுபாடு காட்
டாது செயற்படவேண்டியிருக்கிறது. இதுவொரு உண்மை நிலையாய்
இருப்பதால் புவியியல் அடிப்படையில் "சமநிலை" ஏற்படுத்தும் முறை
யில் நாம் செயலாற்ற வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

இத்தகைய சமநிலையை உருவாக்குவது என்பது எளிதல்ல. சில
நாடுகளின் அதிகாரிகள் அனைத்துலக மன்னிப்புக் கழகத்துடன்
தொடர்பு கொள்ள மறுக்கின்றனர். எமது பார்வையாளர்களை அல்
லது பேராளர்களை தம் நாடுகளில் வருகை தருவதற்கு இசைவு
கொடுக்க மறுப்பதோடு நாம் அனுப்பும் கடிதங்களுக்கோ, தந்திக
ளுக்கோ மறுமொழியும் கொடுக்கிறார்களில்லை. அனைத்துலக தொடர்பை

பொறுத்த வரையில் மிகக்கட்டுப்படுத்தப்பட்ட ஈடுபாட்டையே இவ் வாட்சிகள் காட்டுவதனல் இந்நாடுகளில் நிலவும் மனித உரிமைகள் பற்றி விரிவான தகவல்கள் கிடைப்பதற்கு மாருக மிகக்குறுகிய தகவல் களே இடைத்துள்ளன. இத்தகைய சூழ்நிலையை மாற்றி அமைக்க எம் இயக்கம் பெருமுயற்சிகள் எடுத்துள்ளது. சென்ற ஆண்டு நாம் எடுத்த முயற்சிகளின் முடிவை இவ்வறிக்கைகளில் காணலாம்.

பாதுகாப்பிற்கும் ஒத்துழைப்புக்குமான ஐரோப்பிய மாநாடு அமெரிக்க நாடுகளின் அமைப்பு, போன்ற பிராந்திய அமைப்புக்களுக் கிடையேயும், அத்துடன் அரசுகளுக்கிடையேயான இருபுடைத் தொடர்புகளிலும் ஐக்கிய நாடுகள் சபை அமைப்புகளுக்கிடையேயும், அனைத்துலக அரசியலில் மனித உரிமைகள் ஒரு முக்கிய பிரச்சனையாக சென்ற ஆண்டு உருவாகியது.

சில பகுதிகளில் மனித உரிமைகள் பற்றிச் செய்யப்பட்ட பிரகடனங் கள் உண்மையாகத் தோன்ருவிடினும் மனித உரிமைகளை ஒட்டி கூடிய ஈடுபாடு தோன்றி இருப்பது வரவேற்கத்தக்கதே. அனைத்துலக கவனத் துக்கும் உரிய விடயமாக மனித உரிமைகள் விடயத்தைப் பல அரசுகள் ஏற்றிருப்பது முக்கிய பண்பாக அமையும். அனைத்துலக அடிப்படையில் மனித உரிமைகள் பிரகடனம் செய்யப்பட்ட காலம் தொடங்கி இந் நிலையே பொதுவாக நிலவுகிறது. இச்சூழ்நிலை நிலவியபோது கூட மனித உரிமைகள் மீறப்பட்டதை அவதானித்து கருத்துக்கள் தெரிவிக் கப்பட்டபோது அவர்கள் ஆட்சியில் நாம் "தலையிடுகிறோம்" என்று பல அரசுகளால் முறையிடப்பட்டுள்ளன. இன்று நிலவும இப்புதிய சூழ்நிலையில் மனித உரிமைகளைப்பேண உருவாகிய ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு போன்ற அமைப்புக்கள் கடும் நடவடிக்கை எடுக்க துணை நிற்கிறன. உண்மையில் அண்மையில் நடைபெற்ற அமர்வில் இத்துறை யில் மேலும் நடவடிக்கைகளை இவ்வாணைக்குழு எடுத்துள்ளது.

அனைத்துலக மன்னிப்புக்கழகம் தனது 1978 அறிக்கையில் 111க்கு குறைவில்லாத நாடுகள் பற்றி குறிக்கிறது. ஆனால் இவை கொண்டு இவற்றை கறுப்புப்பட்டிகளில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கருதக்கூடாது. எதிர்காலத்தில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக முக்கிய நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள சில நாடுகளும் இவற்றுடன் சேர்க்கப் பட்டுள்ளன. எனினும் உலகின் பல நாடுகளில் திட்டமிட்டபடி மனித உரிமைகள் பறிக்கப்படுகின்ற கவலை தரும் காட்சியையும் இவ்வறிக்கை எடுத்துகாட்டுகிறது. தமது கருத்துக்களுக்காக மக்கள் சிறையிலிடப் படுவதோடு சிறைக் கைதிகள் துன்புறுத்தப்பட்டதற்கும் தூக்கிலிடப் பட்டதற்கும் சான்றுகளுண்டு.

அடக்கு முறையைக் கையாளுவதற்குகூடப் புதிய போக்குகள் உரு வாகி வருவதையும் இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது. கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளில் மனநோயாளர் மருத்துவ விடுதி

களில் மாறுபட்ட கருத்துடையோர் வைத்திருக்கப்படுகின்றனர். இது மிகக் கவலைதரும் போக்காக அமைகின்றது. காரணம் இவ்விதம் தடுத்து வைத்திருக்கப்படும் சிறைக் கைதிகள் மேல் முறையீடு செய்வதிலோ தமக்குப் பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதிலோ அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதிலோ மிகச்சில வாய்ப்புகளே இவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இவ்விதம் எவ்வளவு காலத்திற்கு வைத்திருக்கப்படுவார்களென்று தெரியாத நிலையிலும் இவர்கள் வருந்துகிறார்கள். அத்துடன் சில மருந்து வகைகளும் வற்புறுத்தப்பட்டு இவர்களுக்கு 'ஊட்டப்படுகிறது'. ஒரு மனநோயாளர் மருத்துவ விடுதிக்கு யாரோ ஒருவர் பிழையாகக் கொண்டுவரப்பட்டுள்ளார் என்பதைப் பற்றி தனியாட்களைப் பொறுத்தவரையில் நிலைநாட்டுவது மிக இடர்பாடுடையதாய் இருக்கிறது. ஆனுல் அரசியலில் மாறுபட்ட கருத்துடையோர் இவ்விதம் திட்டமிடப்பட்டு கொண்டு வரப்படுகிருர்களென்பதற்கு சான்றிருப்பின் இதை எதிர்த்து நடவடிக்கை எடுப்பதற்கு தேவை இருக்கிறது.

மேற்கத்திய ஐரோப்பாவில் பயங்கரவாதிகளுக்கெதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் கொண்டு அவர்களை எதிர்க்கும் போக்கு நிலவுகிறது. இவையும் மனித உரிமைகளை மீறுவதற்கு வழிவகுக்கக்கூடும். சிறைக்கைதிகள் எவருடனும் தொடர்பு கொள்ளாத முறையில் தனியறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். அல்லது சிறப்பான "ஆகக் கூடிய பாதுகாப்பான சிறிய அறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இவ்வாண்டில் இவை பற்றி அனைத்துலக மன்னிப்புக்கழகம் கவலை தெரிவித்துள்ளது. அத்துடன் தனியார் குழுக்களால் ஆட்கள் கடத்திச் செல்லப்படுவதையும், தூக்கிலிடப்படுவதையும் எதிர்த்து கடும் நடவடிக்கைகளை இவ்வியக்கம் எடுத்துள்ளது.

இலத்தின் அமெரிக்கா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் உள்ள பயங்கர நடவடிக்கைகளுக்கு அரசுகள் அதிகாரம் வழங்கியுள்ளன. எதிர்ப்பை முற்றாக ஒழிக்கும் முறையாக ஆட்களை கடத்திச் செல்லல், துன்புறுத்தல், கொலைசெய்தல் போன்ற வழிமுறைகள் திட்டமிடப்பட்ட ஒரு செயல்முறையாக கையாளப்படுகிறது. ஆஜென்தீனு சிலி, கௌத்தமாலா போன்ற நாடுகளில் (Paramiltary) இராணுவக்குழுக்கள் அல்லது பாதுகாப்புப்படைகள் மக்களை சாகடிக்கும் படைகளாக தொழிற்பட்டுள்ளன. அத்துடன் இந்நாடுகளிலுள்ள அரசுகள் இவற்றுக்குப் பொறுப்பு ஏற்கவும் மறுத்துள்ளன. எதிர்ப்பை முற்ருக ஒழிப்பதில் உகண்டா, எதியோப்பியா போன்ற நாடுகளிலுள்ள தலைவர்கள் வெளிப்படையாக செயல்படுகிருர்கள். காவல் பாதுகாப்பிலிருந்த மக்கள் சாகடிக்கப்பட்டதற்கு புதிய சான்றுகள் தென் ஆபிரிக்காவில் உருவாகியுள்ளன.

பல ஆசிய நாடுகளில் ஆட்சி செலுத்துவோர் தமது அரசியல் எதிரிகளை தடுப்புக்காவலில் வைத்திருப்பதை "சட்டவலுவுடையதாக்க" அவசரகாலச் சட்டங்களை பயன்படுத்தியுள்ளனர். இவ்வழிமுறையினல் நீண்ட காலத்திற்கு விசாரணையின்றி மக்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக சிங்கப்பூர், புறூனய் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் விளங்குகின்றன.

பல நாடுகளில் இப்புதிய வழிமுறைகள் நீங்கலாக மனித உரிமைகளை மீறும் பழைய வழிமுறைகள் தொடர்ந்தும் கையாளப்படுகின்றன. இப்படியான கடுமையாக மனித உரிமைகளை மீறுவது பற்றி ஒரு பட்டியலை நாம் வெளியிடவில்லை அனைத்துலக மன்னிப்புக்கழகம் இத்தகைய முறையில் செயற்படவில்லை. எனினும் பல நாடுகளில் தலைவர்கள் தமது குடிமக்களுக்கெதிராகக் கையாளப்படும் பயங்கர வழிமுறைகளுக்கு தொடர்ந்தும் உடந்தையாய் இருக்கிறார்களென்பதற்குரிய அச்சம் தரும் விபரத்தை இவ்வறிக்கை தருகிறது. இங்கு நாங்கள் நினைவு கொள்ள வேண்டியது யாதெனில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அரசுகள் அனைத்தும் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளை ஏற்றுள்ளன என்பதேயாகும்.

அனைத்துலக மன்னிப்புக் கழகம் போன்றவொரு அமைப்பு தொடர்ந்து இருப்பதற்குரிய காரணம் வாக்குறுதி எடுத்துள்ள நாடுகள் தம் வாக்குறுதியை நிறைவேற்றச் செய்வதேயாகும்.



இலங்கை மன்றக் கல்லூரியில் மனித உரிமைகள் நிலையத்தினால் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் காட்டப்பட்ட படங்களில் ஒன்று (நன்றி நவின்ற ரிவைப் பார்க்கவும்) இரத்தினபுரி சுமன பாலிக்கா மகா வித்தியாலயத்தில் பயிலும் அனோமா சிறீயானியினால் தீட்டப்பட்டது.

# அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் 1978 அறிக்கையின் சுருக்கம்

111 நாடுகளில் அனைத்துலக மன்னிப்புக் கழகத்திற்கு கவலை தரும் முறையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றதென்பதனை அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் 19.8 இன் அறிக்கை காட்டுகின்றது.

மனித உரிமைகள் மீறப்படும் நிகழ்ச்சிகளும் அவற்றின் கடுமை யான தன்மையும் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. அதுபோலவே எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் சரியான தன்மைகளில் கூட வேறு பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. எடுத்துக்காட்டாக அப்பே னியா, அல் ஜீரியா, அராபியக் குடாநாடு, பர்மா, மத்திய ஆபிரிக்கப் பேரரசு, கம்பூச்சியக்குடியாட்சி (கம்போடியா), வடகொரியா போன்ற நாடுகளின் நெருங்கிய தொடர்பு அல்லது தனித்தனியே இருக்கும் தன்மை ஆகிய பண்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய அல்லது விரிவான அறிக்கையை தருவதில் அனைத்துலக மன்னிப்புக்கழகத்திற்கு இடர்பாடு இருக்கின்றது எனினும் 77, 78 காலப்பிரிவில் அரசியல் காரணத்துக் காக சிறைவைத்தல், சித்திரவதைசெய்தல், தூக்கிலிடல் போன்ற வற்றை உள்ளடக்கிய அரசியலமைப்புக்கள் இவ்வறிக்கையில் இடம் பெறவில்லையென்று கூறமுடியாது.

இவ்வறிக்கை உள்ளடக்கிய காலப்பிரிவில் மன்னிப்பு அடிப்படை யில் அல்லது ஏனைய வழிகளால் அரசியல் கைதிகளை மொத்தமாக சிறை யிலிருந்து விடுவிக்க பல அரசுகள் துணைநின்றன. கயானா, கயிட்டி, இந்தோனேஷியா, ஈரான், பராகுவே, ரொடீஷியா, சிரியா, தன் சானியா, வியட்னும், யூகோசிலோவியா போன்ற நாடுகள் இங்கு குறிப்பிடத்தக்கனவாகும். சிலவிடயங்களைப் பொறுத்தவரையில் இந்த கைய முறையில் விடுவிக்கப்பட்டதனுல் ஏற்பட்ட விளைவை மதிப்பிடல் கடினமாக இருக்கின்றது. எமக்குக் கிடைத்துள்ள தகவலைக் கொண்டு பார்க்கையில் சில மன்னிப்புகள் அளிக்கப்பட்ட நிலையில் கூட மனச் சாட்சிக் கைதிகள் தொடர்ந்தும் சிறையில் இருப்பதற்குச் சான்றுகளுள. எடுத்துக்காட்டாக இந்தோனேஷியா, ரொடீஷியா, சீரியா, யூகோசி லோவியா போன்ற நாடுகளில் இந்நிலைமை தொடர்கிறது. மாறுக கயிட்டி, மாலீ, ஸ்பெயின், சூடான் போன்ற நாடுகளில் நல்ல மாறுதல் கள் ஏற்பட்டிருப்பதற்கு சான்றுகளுள.

மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா போன்ற நாடுகளில் அரசியல் கைதிகளுக்கு நியாயமான விசாரணை கிடைக்கவில்லை என்பதோடு பல வேளைகளில் எதுவித விசாரணையும் நடைபெறவில்லையென்பதற்கும் சான்றுகளுண்டு.

இம் முரண்பாட்டுடன் நேரடியாகத் தொடர்பு படுத்தப்பட்ட முறையிலேயே உலகின் கவனத்தை ஈர்த்த அராபிய-இஸ்ரேல் போராட்டமும், சில மனித உரிமைகள் மீறப்பட்ட நிகழ்ச்சிகளும் விளங்கின. பாலஸ்தீனர்கள் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கு மேலாக, இஸ்ரேல் தான் கைப்பற்றிய பகுதிகளில் தொடர்ந்து இருந்ததை பாலஸ்தீனர்கள் கண்டித்து கருத்து தெரிவித்ததற்காக சிறையில் வைக்கப்பட்ட பாலஸ்தீனர்களின் சார்பில் அனைத்துலக மன்னிப்புக்கழகம் தொடர்ந்து பணியாற்றியதை ஒரு எடுத்துக்காட்டாக கூறலாம். இஸ்ரேலுக்கு 77 நவெம்பரில் குடியரசுத் தலைவர் அன்வர் சதாத் வருகை தந்ததை எதிர்த்து சிறு வெளியீடுகளை வெளியிட்ட பலர் எகிப்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

எனினும் உலகின் கவனத்தை ஈர்த்த விடயங்களுக்கு மாறாக ஏனைய விடயங்களுக்காகவே மத்திய கிழக்கிலும், வட ஆபிரிக்காவிலும் ஆகக்கூடியளவு மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. பின்வருபவை இதற்குச் சில எடுத்துக்காட்டுக்களாகும். ஈராக்கில் குர்திஸ் குழுவினர் அரசிற்கு மாறுபட்டவர்கள் என்ற ஐயுறவின் பேரில் பொது உடமைக்கட்சி உறுப்பினர்கள் பலர் குற்றஞ்சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்டதோடு அவர்களின் உறவினர்கள் பலர் சிறையிலிடப்பட்டார்கள். டுனிஷியாவில் தொழிற் சங்க நடவடிக்கைக்காக நூற்றுக்கணக்கான மக்கள் அடைக்கப்பட்டார்கள். தங்கள் இனத்தோற்றத்தின் காரணமாக சகாரான் இனத்தில் தோன்றிய மக்கள் மொரகோவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். ஈராக் பகாடிஸ்ட் கட்சி, மாக்சியவாதிகள், மூஸ்லிம் சகோதரர்கள் ஆகியவற்றின் அனுதாபிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு சிரியாவில் சிறையிலடைக்கப்பட்டார்கள். ஈரானில் இடதுசாரிகளும், சமயக் கோட்பாட்டிற்கு மாறுபட்டோர் எனக் கருதப்பட்டோரும் சிறையிலடைக்கப்பட்டனர். அதே வேளையில் அல்ஜீரியாவில் முன்னாள் குடியரசுத்தலைவர் ஆமெட் பென் பெல்லா தொடர்ந்து தனது பதின்மூன்று ஆண்டுகளையும் வீட்டுக்காவலில் கழிக்க நேர்ந்தது.

சேர்மன் இணைப்பாட்சிக்குடியரசு, இத்தாலி, அயர்லாந்து குடியரசு, ஐக்கிய இராட்சியம் போன்ற மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் பல பயங்கரவாதத்தை முறியடிக்க சிறப்புச்சட்டங்களைக் கொண்டுவந்தன. மீளாய்விற்குரிய ஆண்டில் இத்தகைய சட்டத்தின் கீழ் சிறையிலிடப்பட்ட எவரையும் மனசாட்சிக் கைதியாக அனைத்துலக மன்னிப்புக்கழகம் கணிக்கவில்லை. எனினும் தனிப்பட்ட ஆட்களின் உரிமைகளுக்கு வழமையாகக் கிடைக்கக்கூடிய பாதுகாப்புக்களை இவ்விதம் எளிதாக்

கும் அல்லது நீக்கும் முறையில் சட்டம் கொண்டுவருவது கவலைக்குரிய விடயமென இவ்வறிக்கையில் அனைத்துலகமன்னிப்புக்கழகம் கூறுகிறது. ஐயுறவின் அடிப்படையில் பிடிக்கப்பட்டோர் மேலும் துன்புறுத்தப் படுவதற்கும் நீதியான விசாரணைக்குத் தடையாகவும், கொடூரமான மனிதத் தன்மையற்ற அல்லது கீழ்த்தரமான முறைகளுக்கு இவர்கள் ஆளாக்கப்படுவதற்கும் இச்சட்டங்கள் இடங்கொடுக்கின்றனவென அனைத்துலக மன்னிப்புக்கழகம் கருதுகின்றது.

கிழக்கு ஐரோப்பாவில் எல்லா நாடுகளும், சோவியத் சமவுடமைக் குடியரசு ஒன்றியமும், அதிகாரிகளின் கருத்துக்கு மாறுபட்ட முறையில் மனச்சாட்சியின் பெயரில் தம் உரிமைகளை நடைமுறைப்படுத்துவோரின் மீதும் அரசின் இசைவுபெறுது நாட்டைவிட்டு வெளியேறுவோர் மீதும், சிறைத்தண்டனை விதிக்கும் சட்டங்களைக் ("அரசுக்கெதிரான குற்றங் கள்" என வழமையான ரூபிரிக்கின் (Rubric) சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டவை) கொண்டிருந்தன. "தேவையற்ற தொல்லைகள் கொடுப் பவர்" "வெறியாட்டம் ஆடுவோர்" "உளவறிந்து சொல்லுவோர்" போன்றோரை எடுத்துக்காட்டாக வைத்து அரசியல் காரணங்களை வெளிப்படையாகத் தெரிவிக்காத நிலையில் வன்முறை குற்றச்சாட்டின் பெயரில் தம் அரசுக்கு மாறுபட்ட கருத்துடையோரை செக்கோசெல வாக்கியா, போலந்து, ரூமேனியா, ஐக்கிய சோவியத் சமவுடமைகுடி யரசு ஒன்றியம் ஆகிய நாடுகள் சிறைசெய்தன. எதுவித ஐயத்துக்கும் இடமின்றி அனைத்துலக மன்னிப்புக்கழகம், சோவியத் சமவுடமை குடி யரசு ஒன்றியம், ரூமேனியா ஆகிய இரு நாடுகளே மனட்சாட்சிக் கைதி களை மனநோயாளிகளென பெயர் சூட்டி உண்மையான மருத்துவக் காரணங்களுக்கு மாறாக அரசியல் காரணங்களுக்காக மனநோயாளர் விடுதியில் கட்டாயச்சிறையில் வைத்திருக்கிறார்கள் என்று கூறும் நிலை யில் உள்ளன. அமெரிக்கர்களைப் பொறுத்தவரையில் இடதுசாரிகளின் அனுதாபிகள் என்ற பெயரில் அரச அதிகாரிகளால் அல்லது இராணு வக் குழுக்களால் கடத்திச்செல்லப்பட்டு, தொடர்ந்தும் மக்கள் சித்திர வதைக்குள்ளாக்கப்படுகிறார்கள் அல்லது கொல்லப்படுகிறார்களென் பதை இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது. ஆஜென்டீனா, எல்சல்வ டோர், கௌத்தமலா, மெக்சிக்கோவின் சில பகுதிகள், நிக்காரகுவ, உருகுவே போன்ற நாடுகள் மக்களைக் கடத்திச் சென்று சாகடித்திருப் பதே அனைத்துலக மன்னிப்புக்கழகத்தின் முக்கிய கவலைக்குரிய விடய மாக விளங்குகிறது. மீளாய்வுக்குரிய காலப்பிரிவில் 1973க்குப் பின் சிலியில் ஏறக்குறைய 1500 பேர்கள் "மறைந்துள்ளார்கள்" என்பதனை இவ்வமைப்பு தனது முயற்சியினால் கண்டுபிடித்துள்ளது.

மனித உரிமைகளை மீறும் அரசுகள் பல இத்தகைய செயல்களுக்கு மறுப்புக் கூறுவதுடன் நிகழ்ச்சிகள் "தேசிய பாதுகாப்பு" என்ற பெயரி லும் பயங்கரவாதத்துக்கு எதிராக நடைபெறும் போராட்டம் என்ற பெயரிலும் கருத்துக்கள் தெரிவித்து இந்நிகழ்ச்சிகளை மூடிமறைக்கும் போக்கு ஒரு பொது நிகழ்ச்சியாக அமைகிறது. பல இலத்தின் அமெ

ரிக்க நாடுகளில் "கைப்பற்றும் நிலையிலுள்ள" சட்டம் நடைமுறையி லிருக்கையில் நேரடி அரசியல் அதிகாரியின் கீழ் குறுகிய நீண்ட கால அடிப்படையில் அரசியல் காரணத்துக்காக சிறையில் வைக்கும் அதி காரமும் வழங்கப்பட்டது. கியூபாவில் அரசியல் சார்ந்த கூற்றுக்களை மேற்கோள் காட்டி 1978 இன் தொடக்க காலத்தில் "3200" அரசியல் கைதிகள் இருந்ததாக இவ்வறிக்கை கூறுகிறது. 1960[1] களின் முதற் பகுதியை அடுத்து இவர்கள் பல சிறையில் வைத்திருக்கப்பட்டிருக் கிறார்கள்.

ஐக்கிய அமெரிக்காவில் மனச்சாட்சிக் கைதிகள் அல்லது புலனாய்வுக் குட்பட்டவர் என்ற நிலையில் 15 கைதிகளை அனைத்துலக மன்னிப்புக் கழகம் கையேற்றுள்ளது. கைதிகளின் நம்பிக்கைகள் அல்லது அவர் களின் இனத்தோற்றங்கள் என்பவற்றுக்காகத்தான் சிறையில் வைக்கப் பட்டிருப்பதாக அனைத்துலக மன்னிப்புக்கழகம் நம்பியதற்கு அல்லது ஐயுறவு கொண்டதற்கு மாறாக குற்றவியல் குற்றத்தின் மேல் குற்றஞ் சாட்டப்பட்டு அல்லது விசாரணைக்குட்படுத்தப்படும் கைதிகளாகவே இவர்கள் விளங்குகிறார்களென இவ்வறிக்கை குறித்துள்ளது.

கம்போஷியா குடியாட்சி லாவோஸ், மக்கட்சீன குடியரசு, வியட் னாம் போன்ற நாடுகளில் வலதுசாரிகள் என்ற பெயரில் அல்லது ஆசியா வின் முன்னைய அரசுகளின் ஆதரவாளர்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள். கம்போஷியா குடியாட்சி யில் பெருமளவில் கொலைகள் நடைபெறுவதாக தொடர்ந்தும் குற்றச் சாட்டுக்கள் வந்தபடியிருக்கின்றன. "அரசியல் மீள் கல்வி" என்ற பெயரில் லாவோஸ், மக்கள் சீன குடியரசு, வியட்னாம் ஆகிய நாடுகளில் ஆயிரக்கணக்கானோர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந் தோனேஷியா, மலேஷியா, கொரியா குடியரசு, சிங்கப்பூர், தைவான் போன்ற ஏனைய நாடுகளில் ஆளும் அரசுகளுக்கு எதிரான நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளோர் என்ற ஐயுறவில் பல ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் பலருக்கு இதுவரை எதுவித விசாரணையும் நடாத்தப்படவில்லை. இவ்வரசுகள் ஆட்சியில் இருக்கும் வேளையில் பல அவசர காலச்சட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளற்ற நிலையில் நிர்வாக அடிப்படை யிலேயே அரசுக்கு மாறுபட்டோர் அல்லது ஐயுறவுக்குட்பட்டோர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

தென் ஆபிரிக்காவின் வெள்ளைச் சிறுபான்மை அரசுகள், பல்வேறு கறுப்புத்தேசிய இயக்கங்களுக்கு ஆதரவு அளிப்போர் என்ற பெயரில் பலரைத் தொடர்ந்து சிறையில் வைத்துள்ளன. எதுவித விசாரணையு மின்றி சிறையில் வைத்திருப்பது றொடிஷியாவிலும் சிம்பாவா என் னும் இடத்திலும் ஒரு பொதுப்போக்காக உள்ளது. 1978 இன் முதற்

---

1. எனினும் 197 நவெம்பரில் கியூபா அரசு பலரை விடுவித்துள்ளதாக அறிவித்துள்ளது.

பகுதியில் எமக்குத் தெரிந்த தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட 950 கைதிகளில் 700 பேர் விடப்பட்டபோதும் பதிய தடுப்புக்காவல் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறையில் இருந்தனர். அரசியல் விடயங்களைப் பொறுத்தவரையில் விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைப்பதும், நாடுகடத்தலும் ஒரு பொது நிகழ்ச்சியாக தென் ஆபிரிக்காவில் நிகழ்கிறது. இரு நாடுகளிலும் கைதிகள் சித்திரவதைக்கு ஆளாகியதையும், துன்புறுத்தப்பட்டதையும் அனைத்துலக மன்னிப்புக்கழகம் பதிவு செய்துள்ளது.

ஆபிரிக்காவின் ஏனைய பகுதியில் அரசாங்கத்துக்கு எதிராக சதி முயற்சியில் ஈடுபட்டோருக்கு அல்லது ஈடுபடுவோரென குற்றஞ்சாட்டப்பட்டோருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது பலவேளைகளில் அதிகாரத்திற்கு எதிராக செயல்படுவோருக்கு விசாரணையின்றியே சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. கொங்கோ, மத்திய கயானு, சோமாலியா, சயார போன்ற நாடுகளில் சில விடயங்களைப் பொறுத்த வரையில் இவ்விதம் தடுத்து வைத்திருக்கப்படும் ஆட்கள் விசாரணைக்குப்பின் தூக்கிலிடப்பட்டிருக்கிறார்கள் அல்லது வெறுமனயே சாகடிக்கப்பட்டிருக்கிறார்கள். எத்தியோப்பியாவில் பயங்கர புரட்சி என்னும் திட்டத்தின் கீழ் அதிகாரிகளுக்கு எதிரானோர் என ஐயுறவுப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் சாகடிக்கப்பட்டுள்ளார்கள் உகண்டாவில் அனைத்துலக மன்னிப்புக்கழகம் கூறியதற்கமைய சில வேளைகளில் பாதுகாப்புப்படையினால் சாகடிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை "மிகப் பெருமளவு கொலை"யை அடைந்துள்ளது. ஆதிக்குடிமக்கள் என்ற காரணத்திற்காக லங்கோ, அசோலி ஆதிக்குடிமக்களின் உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள். ஏனைய பல ஆபிரிக்க நாடுகளில் இவை சார்ந்த காரணங்களுக்காக அரசியல் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

உலகின் பல நாடுகளில் தூக்குத்தண்டனை பேணப்பட்டு குற்றவியல் அரசியல் போன்ற விரிவான எல்லைகளுக்குள் அடங்கிய குற்றங்களுக்காக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சிலவேளைகளில் முறையான சட்ட நடவடிக்கைகளின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டிருக்க மற்றும் சில வேளைகளில் எதுவித விசாரணையுமின்றி கொலைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை வரையப்படுகையில் ஐக்கிய அமெரிக்காவில் "இறப்போர் வரிசையில்" சிறைக்கைதிகள் எண்ணிக்கை 464 ஆகும் ஐரோப்பா அவையில் உறுப்புரிமை நாடுகளாக விளங்கும் பிரான்சிலும் துருக்கியிலும் தூக்குத்தண்டனை விதிக்கப்படுகிறது. தூக்குத்தண்டனையை நீக்குவதற்கு பல நாடுகள் உறுதியளித்த நிலையிலும் எல்லாப் பொதுவுடமை நாடுகளும் தூக்குத்தண்டனை முறையைத் தொடர்ந்து வைத்திருக்கின்றன. சில நாடுகளில் "ஆபிரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு" ஆகிய நாடுகளில் வன் முறையில் ஈடுபடாத அரசியல் குற்றம் இழைத்தோர் மீதும் தூக்குத்தண்டனை விதிக்கப்படு

கிறது. ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா போன்ற நாடுகளில் சட்ட நடவடிக்கைகளுக்குப் பின் நடைமுறைப்படுத்தப்படும் தூக்குத்தண்டனையானது சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பால் நடைமுறைப்படுத்தப்படும் தூக்குத்தண்டனைகளாக பெருகியுள்ளன.

அனைத்துலக மன்னிப்புக்கழகம் ஸ்டொக்கொம் என்ற இடத்தில் அனைத்துலக மாநாடொன்றை தூக்குத் தண்டனை விடயத்தை ஆராய்வதற்காக 1977 டிசெம்பரில் கூட்டியது. ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, வடதென் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிராந்திய நாடுகள் போன்ற 200க்கு மேற்பட்ட நாடுகளின் பேராளர்கள் தூக்குத் தண்டனையானது அனைத்துலக சட்டத்திற்கு முரணானதென, ஐக்கிய நாடுகள் சபையை பிரகடனம் செய்யுமாறு வேண்டிநிற்கின்றனர். ஸ்டொக்கோம் பிரகடனமென இம்மாநாட்டில் உருவாகிய தீர்மானம் இனவியல், மொழியியல், சமயயியல், பின்தங்கிய குழுக்கள் ஆகியவற்றின் எதிர்ப்பை அடக்கி ஒடுக்குவதற்கு கையாளப்படும் ஒரு கருவியாக அடிக்கடி இந்தத் தூக்குத் தண்டனை கையாளப்படுகின்றதென்றும் வலியுறுத்துகிறது. அத்துடன் அரசியல் அடக்குமுறை நோக்கமாக அரசமுகவர் நிலையங்கள் அல்லது ஏனையோர் தூக்குத்தண்டனையைக் கையாளுவது ஏற்கமுடியாதெனவும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஆபிரிக்கா

ஆபிரிக்காவில் 77-78 காலப்பிரிவில் உள்நாட்டுத் தகராறுகளும், அனைத்துலகப் போராட்டங்களும் தொடர்ந்தும் தலைதூக்கிய நிகழ்ச்சிகளாக விளங்கின. பலநாடுகளில் மனித உரிமைகளையொட்டி உருவாகிய குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக்கூட மூடிமறைக்கும் அளவிற்கு மேற்குறித்த நிகழ்ச்சிகள் தலைதூக்கி விளங்கின. தன்சானியாவில் 1972 ஐ அடுத்துத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரவை அமைச்சரான அப்துல்ரகுமான்பாபுவும், முக்கியத்துவம் பெற்ற நமிபியன் தேசியவாதியான அன்றீஸ் சிப்பங்கா விடுவிக்கப்பட்டதும் இந்நாட்டில் மனித உரிமைகளையொட்டி ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதினை எடுத்துகாட்டுகின்றது.[1] மேற்கு ஆபிரிக்காவின் (அ) கயானாவின் மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் கைதியாகிய உரோமன் கத்தோலிக்க பிசப்பாண்டவரான "றேமண்ட் மேரி ரிச்டிப்போ" என்பவர் ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட ஏனைய அரசியல் கைதிகளோடு வெகுவிரைவில் விடுவிக்கப்படக்கூடுமென 1978 மேயில் அறிவிக்கப்பட்டது. றொடீஷியாவில் வெள்ளையர் சிறு

1. மனசாட்சிக் கைதிகள் பலரும் தடுப்புக்காவலில் இருந்த ஏனைய அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட்டதோடு சித்திரவதையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது அனைத்துலக மன்னிப்புக்கழகத் தூதுக்குழு தன்சேனியாவிற்குச் சென்று அங்குள்ள அரச அலுவலருடன் உரையாடியதன் விளைவாக வெளிநிற்கும் சில சிக்கல்களை புலனாய்வு செய்வதாக அவர்கள் உறுதி அளித்துள்ளார்கள்.



ரொடீஷியா/ஷிம்பாபே போன்ற நாடுகளிலுள்ள "பாதுகாக்கப்பட்ட" கிராமத்தின் வாசலில் பாதுகாப்புப் படையினர் "வதிவும்" பெண்களை சோதனையிடுகின்றனர். 1972க்குப்பின் 2000,000க்கு மேற்பட்ட ஆபிரிக்கக் குடிமக்கள் இம் முகாம்களுக்குள் கொண்டு செல்லப்பட்டனர். முகாமில் ஊரடங்குச் சட்டத்தை மீறுவோர் மீது விதிக்கப்படும் தண்டனை சாகடிப்பதேயாகும்.

நன்றி, படம்: தென் ஆபிரிக்காக்குரிய அனைத்துலக பாதுகாக்கும் உதவிநிதி.

பான்மை ஆட்சி பிசப்அவல் முஸ்ஸரோபியாவுடனும் வணக்கத்திற் குரிய நடாபனின்சிசித்தோல் ஆகியோரால் வழிநடத்தப்படும் தேசிய அரசியல் அமைப்புக்களுடன் செயற்பட்ட உள்நாட்டு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 700 அரசியல் கைதிகளை விடுத்தது. நாட்டுப்பற்றுமுன்னணியின் ஆதரவாளர்களாக வும் உள்நாட்டு ஒப்பந்தத்தின் கடும் எதிர்ப்பானவர்களுமாகிய ஏனைய 250 கைதிகள் 1978 மே முடிவுவரை விடுவிக்கப்படவில்லை என்பதோடு ஏறக்குறைய 1000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கை கொண்டவர்களென மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் குற்றவாளிகள் எனக் கணிக்கப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் இதுவரை ஒருவித நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. மாலியிலும், சூடானிலும் தேசிய இணைப்பை உருவாக்குவதற்காகவே இவ்வரசுகளால் மன்னிப்புக்கள் வழங்கப்பட்ட நிலையில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். குடியரசுத் தலைவர் மொடிற்றேு கெலிற்றுவின் அரசு 1968 இல் கவிழ்க்கப்பட்டதை யடுத்து விசாரணை நடத்தப்படாமல் தடுப்புக் காவலில் வைக்கப்பட் டிருந்த பலர் மாலியில் 1977 முடிவில் விடுவிக்கப்பட்டபோது அவ் எண் ணிக்கையில் முன்னைய அமைச்சர்களும் உள்ளடங்கியிருந்தனர். குடியர சுத் தலைவர் மவுசாரிறுரோவின் அமைச்சர்கள் பலர் பதவி விலக்கப் பட்டும், சிறையிலடைக்கப்பட்டதையும் அடுத்து 74 தொடங்கி அரசி யல் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த பதினொரு பேரை விடுவிக்கும்படி மேற்குறித்த குடியரசுத் தலைவர் கட்டளை பிறப்பித்தார். 77 யூலையில் சுடானில் உள்ள குடியரசுத் தலைவர் நிமேரியின் அரசு, அரசைக் கவிழ்க்க பல முயற்சிகள் எடுத்ததாகத் தடுப்புக் காவலில் அல்லது சிறையில் வைக்கப்பட்ட 1000இற்கு மேற்பட்ட கைதிகளை விடுவித்தது. அடுத்த மாதத்தில் 110 கைதிகள் குறிப்பாகத் தென் பகுதியைச் சார்ந் தோர் விடுவிக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது. இக்காலவரையில் விடுவிக்கப்படாத கிளான்ஸ்ரைன் பொதுவுடமைக் கட்சியின் ஆதர வாளர்களாகவும், தொழிற் சங்கவாதிகளாகவும் விளங்கிய 130 கைதி கள் 1978 மேயில் விடுவிக்கப்பட்டனர்.

றொடீசியாவிலும் தென் ஆபிரிக்காவிலும் நடைபெற்ற அடக்கு முறைகளை எதிர்த்து ஓடிவந்த அகதிகளைத் தொடர்ந்து ஏற்கவும் அவர் களுக்கு உதவவும் பொச்சுவாகு, லெசெத்தோ, சாம்பிய போன்ற நாடுகள் முன்வந்தன. அதே வேளையில் உகண்டா, எத்தியோப்பியா கைதிகளுக்குக் கென்யா உதவியது. தென் ஆபிரிக்காவின் மத்திய காயானுவில் குடியரசுத்தலைவர் மாகியஸ் நியூமா ஆட்சியிலிருந்து கமரியொனுக்கும் காபனுக்கும் பல அகதிகள் தப்பி ஓடினர். புருண்டி யிலும் நைஜீரியாவிலும் இராணுவ ஆட்சியிலிருந்து படிப்படியாக குடி யாட்சி அமைப்பு உருவாகியது. புதிய அரசு எத்தகைய வடிவில் அமையவேண்டும் என்பதை முடிவுசெய்ய 1978 மார்ச்சில் பொதுமக்கள் வாக்கெடுப்பொன்றினை குடியரசுத் தலைவர் ஆச்சம்பேங் தலைமையில் இயங்கிய இராணுவ அரசு நடத்திய பின்பும் அரசியல் எதிரிகள்

பலரைத் தடுப்புக்காவலில் வைத்திருந்தது. 1978 யூலை ஐந்தில் குடியரசுத் தலைவர் ஆச்சம்பேங் பதவி துறத்தலை அடுத்துப் பல கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டனர்.

1977-78 இல் ஆபிரிக்காவில் தொடர்ச்சியாகப் பல நெருக்கடிகள் உருவாகி மனித உரிமைகளில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. எத்தியோப்பியாவிலும், சோமாலியாவிலும் ஏற்பட்ட மோதலும் ஒசடன், எரித்திரியா போன்ற நாடுகளின் பிரிவினைப் படைகளுடன் ஏற்பட்ட போராட்டமும் பெருமளவு இறப்புக்களுக்குக் காரணமாயிருந்தது. இவ்வாறு இறந்தோரின் எண்ணிக்கையில் போரிட்டோர் மட்டுமன்றி போர் வலயங்களில் வாழ்ந்த குடிமக்களும் இருந்தனர். அதே வேளையில் துருக்கிக்கும் (தற்காலிக இராணுவ நிர்வாக சபைக்கும்) அதனின் அரசியல், இலட்சிய எதிர்ப்பாளருக்குமிடையில் ஏற்பட்ட அதிகாரத்தைக் கைப்பற்றும் கிளர்ச்சி அரசியல் கொலைகளிலும் பெருந்தொகையானோர் சிறையில் வைக்கப்படுவதற்கும் தூக்கிலிடப்படுவதற்கும் வழி வகுத்தது. குறிப்பாக அடிஸ்பாபா என்ற தலைநகரில் அதிகமாக நிகழ்ந்தது. தென்னுபிரிக்காவில் மொசாம்பிசகிற்கும், சம்பியாவிற்குமுள்ளே றொடீசியாப் பாதுசாப்புப்படைகள் எல்லையைத் தாண்டிச் சென்ற நிலையில் றொடீசியாவிற்கும் சப்பியாவிற்கும் இடையிலும் அங்கோலாவிற்கும் தென்னுபிரிக்கப்படைகளுக்குமிடையில் மோதல் உச்சநிலையை அடைந்தது. றொடீசியாவிற்குள் கொரில்லா நடவடிக்கைகள் அதிகரித்ததை அடுத்து கொரில்லா நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் உள்ளூர் மக்களிடமிருந்து அவர்களைப் பிரிக்கவும் கூடிய அடக்குமுறை நடவடிக்கைகளை வெள்ளையர் சிறுபான்மை ஆட்சி கடைப்பிடித்தது. பாதுகாக்கப்பட்ட கிராமங்கள் என்ற அமைப்பில் வேலியிடப்பட்டு பாதுகாக்கப்பட்ட முகாம்களுக்குள் கிராம மக்கள் வலிந்து தள்ளப்பட்டனர். வலிந்து முகாம்களிலிடும் இம்முறை றொடீசியாவில் மேலும் விரிவுறச் செய்யப்பட்டு பெருமளவு ஆபிரிக்கக் குடிமக்கள் மிகக்கடுமையான ஊரடங்குச் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டனர். நாட்டுப் புறங்களில் இத்தகைய நிலைமை நிலவியதன் காரணமாக 1978 இன் முதற் பகுதியில் விடுவிக்கப்பட்ட கைதிகள் தங்கள் இல்லங்கள் செல்லாது அதைவிடப் பெருமளவு பாதுகாப்பாக உள்ள பெரும் நகரங்களில் தங்கி இருக்க விரும்பினர்.

குடியரசுத் தலைவர் மொபிற்றுேவிற்கு எதிரிகளாக விளங்கிய நாடு கடத்தப்பட்டோர் 1977 மேயில் சாவா மாகாணத்தைக் கைப்பற்றியதை அடுத்து ஆண்டு முழுவதும் உள்நாட்டு இடர்பாடுகளை சயர் எதிர்நோக்கியது. 1978 பெப்புருவரியில் தமக்கெதிராக ஒரு சதிமுயற்சியைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்த அரசு இத்தகைய செயலில் ஈடுபட்டதாக ஐயுறவுப்பட்ட மக்களை கின்சாசாவில் மார்ச்சு மாதத்தில் விசாரணைக்கு உட்படுத்தியது. இவ்விதம் குற்றம் சாட்டப்பட்ட 13 பேர் மீது சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு ஏறக்குறைய உடனடியாக தூக்கி

விடவும்பட்டனர். மன்னிப்பு அளிக்க வேண்டுமென அனைத்துலக நாடுகளினுல் விடுக்கப்படும் வேண்டுகோளுக்கு தான் செவிசாய்க்க முடியாதெனக் குடியரசுத் தலைவர் மொபிற்ருே குறிப்பிட்டார். 1978 சனவரியில் இந்த விசாரணை நடைபெறும் முன்பேயே முன்னைய புரட்சித் தலைவர் பிறெறிமுலேலியின் ஆதரவாளர்கள் பலர் பண்டுண்டு மாநிலத்தில் குடியரசுப்படைகளினுல் சாகடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. பின்பு 1978 மேயில் கிளர்ச்சிப்படைகளால் சாபாமாகாணம் மீண்டும் கைப்பற்றப்பட்டது. பின்பு அவர்கள் பின்னே தள்ளப்பட்டநிலையிலும் கிளர்ச்சியாளர்களால் அல்லது போராட்டத்தின் போது, பல நூற்றுக்கணக்கான சயரோஸ் குடிமக்களும் நாடுகடத்தப்பட்ட ஐரோப்பிய தொழிலாளர்களும் சாகடிக்கப்பட்டனர்.

மிகப்பெருமளவில் மனித உரிமைகள் மீறப்பட்ட ஏனைய நாடுகளாக விளங்குபவை மத்திய கயாஞவும், உகண்டாவுமாகும். இவ்விரு நாடுகளிலும் தனிப்பட்ட கைதிகளுக்காக அனைத்துலக மன்னிப்புக் கழகம் பணிபுரியமுடியாமலிருந்தது. இதற்குரிய அடிப்படைப் பயங்கர காரணம் யாதெனில் அரசுக்கு மாறுபட்டோர் அல்லது மாறுபட்டோர் என ஐயுறவுப்பட்டோர் சாகடிக்கப்பட்டனர் அல்லது நாடு கடத்தப்பட்டனர். தென் ஆபிரிக்காவில் 1977 செப்டெம்பரில் தடுப்புக்காவலில் வைத்திருக்கப்பட்ட கறுப்பு மனச்சாட்சி தலைவர் ஸ்டேவ் பிக்கோ அவர்களின் இறப்பும் 5 கிழமைகளுக்குப் பின் கறுப்பு மனட்சாட்சி இயக்கம் தடைசெய்யப்பட்டதும் பிரிட்டோரியா அரசின் அடக்குமுறைக் கொள்கைகளை அனைத்து உலகிற்கும் வெளிக்காட்டும் முறையிலமைந்தது. விசாரணையின்றித் தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படும் பொதுப்பிரச்சினையை மீண்டும் கவனத்திற்கு ஈர்க்கும் முறையில் பிக்கோவின் மறைவு அமைந்திருந்தது. இது தென் ஆபிரிக்காவை மட்டும் பாதிக்கவில்லை. ஆபிரிக்காவின் பல நாடுகளையும் பாதித்துள்ளது. 1977-78 இன் காலப்பிரிவில் அனைத்துலக மன்னிப்புக்கழகத்தின் கவலைக்குரிய பெரு விடயங்களில் இதுவுமொன்ருக விளங்கியது.

கென்யாவில் துக்கி வா தியன்கோ போன்ற அனைத்துலக பெயர் படைத்த எழுத்தாளரையும் உள்ளடக்கு முறையில் (77 டிசம்பரில் அடைக்கப்பட்டவர்) கண்டனக்குரல் எழுப்புவோரை வாயடைக்கச் செய்யும் நோக்குடன் குற்றஞ்சாட்டாது விசாரணை நடத்தாது தனது அதிகாரங்களைப் பயன்படுத்தித் தடுப்புக்காவலில் வைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டது. இன்னும் 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். நமிபியாவில் 1977 நவம்பரில் தென் ஆபிரிக்கா அரசினுல் நியமிக்கப்பட்ட நிர்வாக நாயகம் விசாரணையின்றி காலவரையற்ற முறையில் தடுப்புக்காவலில் வைக்கும் சட்டத்தை நீக்கிய போதும் இத்தேவைக்காக பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டதோடு 1978 ஏப்பிரலில் காலவரையறையின்றி தடுப்புக்காவலில் வைப்பதற்கு சட்டமும் கொண்டுவரப்பட்டது. இதுபோன்றே செயிசில்

சிசிஸ் குடியரசுத் தலைவர் ரெனியின் அரசைக் கவிழ்க்க சதி முயற்சியில் ஈடுபட்டதாக ஐயுறவின் அடிப்படையில் தடுப்புக்காவலில் வைக்கப் பட்ட 20 பேர்களை விடுவிக்கும் உத்தரவை உயர் நீதிமன்றம் பிறப்பிக் கக்கூடுமென அஞ்சி காலவரையின்றி தடுப்புக்காவலில் வைத்திருக் கும் சட்டத்தை விரைந்து நிறைவேற்றியது. கானவில் தடுப்புக்காவ லில் வைக்கப்பட்ட 170 பேரின் சார்பில் 1977 நவம்பரில் விடுக்கப்பட்ட விண்ணப்பம் வெற்றியளிக்கவில்லை. ஏனைய பல நாடுகளில் எடுத்துக் காட்டாக சுவாசிலாந்தில் நடைமுறையிலிருந்த தடுப்புக்காவல் சட் டங்கூட அதிகாரிகளால் பிழையான முறையில் பயன்படுத்தப்பட்டது. 1973 ஏப்ரலில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு யாப்பு தடைசெய்யப் பட்டகாலம்.வரையில் முக்கிய எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய டாக் டர் அம்புறேஸ் சுவேன் அவர்கள் 60 நாள் தடுப்புக்காவலில் கட்டளை களின் கீழ் 6 மாதங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பலரில் ஒருவராக விளங்கினர்.

இவற்றிலும் பார்க்க நீண்ட காலத்திற்கு பலர் தடுப்புக்காவலில் வைக்கப்படுகின்றனர். 1978இன் முற்பகுதியில் றொடீஷியாவில் விடுவிக் கப்பட்ட பலர் விடுவிக்கப்பட்ட காலத்தில் 14 ஆண்டுகளுக்கு மேலாக எதுவித குற்றச்சாட்டுமின்றித் தொடர்ச்சியாக வைக்கப்பட்டிருந்த னர். கயானுவில் 7 ஆண்டுகளுக்கு மேலாக பல நூற்றுக்கணக்குக்கு மேலானோர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அதே வேளை யில் மொசாம்பிக்கில் பிரிலிமோக்கு (மொசாம்பிக் விடுதலை முன்னணி) மாறுபட்ட ஆனுல் தேசிய இயக்கத்தில் முன்பு முக்கியத்துவம் பெற் றிருந்த தனியாட்களாகிய போலே குமேன்னி போன்ற தனியாட்கள் 1975 தொடங்கி தொடர்ச்சியாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார் கள். இவர்கள் போன்றோருக்கும் ஏனைய ஆபிரிக்க நாடுகளில் தடுப்புக் காவலில் இருந்த பலருக்கும் 1977-78 காலப்பிரிவு சில மாற்றங்களைக் கொண்டு வந்தது.

தென் ஆபிரிக்காவில் நிற ஒதுக்குகளுக்கு மாறுபட்டோரை அடக் கவும், அச்சுறுத்தவும் விசாரணை அற்றநிலையில் தடுப்புக்காவலில் வைத் திருக்கும் சட்டத்தைப் பயன்படுத்திய அரசு சுவேட்டோ விலும் ஏனைய பகுதிகளிலும் இனக் கலவரங்களின்போது பிடிக்கப்பட்ட தடை செய்யப்பட்ட ஆபிரிக்க தேசிய அரசியலமைப்புக்களினதும் கறுப்பர் கள் இயக்கங்களினதும் ஆதரவாளர்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் பல அரசியல் விசாரணைகளை நடாத்தியது. இதன் விளைவாக ரெபன் தீவிலும் மற்றும் ஆகக் கூடிய பாதுகாப்புச் சிறைகளிலும் சிறைக்கைதி களாக காலம் கழித்தோரின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித் தது. றொடீசியாவின் ஆட்சி தான் கைப்பற்றிய தேசிய கொரில்லாக் களைத் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தியதோடு இக்கொரில்லாக் களுக்கு உணவும், உறையுளும், உதவினர் என்ற பேரில் ஆபிரிக்க குடி மக்களையும் விசாரணைக்கு உட்படுத்தியது. ஏனைய முக்கிய அரசியல் விசாரணைகள் கொங்கோவிலும் சயரிலுய நடைபெற்றன.

இவ்வாண்டில் பல நாடுகளில் இருந்து சித்திரவதை செய்யப்பட்டவை பற்றிய அறிக்கைகளை அனைத்துலக மன்னிப்புச்சழகம் பெற்றது. இவ்விதம் அறிவித்த நாடுகளில் தென் ஆபிரிக்காவும், நமிபியாவும் அடங்கும். பாதுகாப்பு காவற்படையினுல் தடுப்புக்காவலில் உள்ளோர் சித்திரவதைக்குள்ளாக்கப்படும் நிகழ்ச்சி ஒரு சாதாரண நிகழ்ச்சியாக விளங்கியது. அத்துடன் நீதிமன்றத்தில் அரசியல் விசாரணைக்காக அரசு சார்பில் சாட்சியளிக்க வந்த பலர் காவற் படையினுல் மின்சார அதிர்ச்சிக்கும் உடம்பில் கடும் தாக்குதல்களுக்கும் ஆளாக்கப்பட்ட நிலையிலேயே சாட்சியளிக்க வந்ததாக நீதிமன்றத்தில் முறையிட்டனர். றொடீசியாவில் அரசியல் விசாரணைக்குப் பயன்படுத்தத்தக்க குற்றஞ் செய்ததை ஒப்புக்கொள்ளும் அறிக்கைகளைக்கூட பாதுகாப்புப்படையினர் சித்திரவதை செய்தே பெற்றனர் என்றும் கூறினர். அத்துடன் போர் வலயத்தில் வதியும் ஆபிரிக்கக் குடிமக்களை அச்சுறுத்துவதற்கும் மேற்குறித்த வழிமுறைகள் கையாளப்பட்டன. சயர், உகண்டா, எத்தியோப்பியா, தன்சானியா, கோமொரோஸ் போன்ற நாடுகளிலிருந்துகூட சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப்பெற்றன. எனினும் தன்சானியா அரசு தடுப்புக்காவலில் வைத்திருக்கப்பட்டோரைச் சித்திரவதை செய்த காவல்படையின் 4 உறுப்பினர் மீது வழக்குத்குத் தொடர்ந்தது.

தென் ஆபிரிக்காவில் பயன்படுத்தப்படும் தூக்குத்தண்டனை கூட ஆழ்ந்த கவலைக்கு இடம் தருகின்றது. மிகக் கூடியளவு சட்ட அடிப்படையிலான தூக்குத்தண்டனைகளைத் தென் ஆபிரிக்கா நிறைவேற்றியுள்ளது. ஜேம்ஸ் குருகர் என்ற நீதி அமைச்சரின்படி 1978 மே 31 இல் முடிவுற்ற இரண்டாண்டு காலப்பிரிவில் 151 தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. 1977 யூனில் இரண்டு வெள்ளைக்காரர்களை சுட்டதென்ற குற்றச்சாட்டில், சொலமன் மக்லான்கு என்ற 21 வயது இளைஞன் மீது 1960 களின் நடுப்பகுதியை அடுத்து அரசியல் குற்றத்துக்காக முதல் தூக்குத் தண்டனை 1978 மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது. அரசியல் விசாரணைக்குப்பின் 1978 சனவரியிலும், மார்ச்சிலும் கொங்காவிலும், சயரிலும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. எத்தியோப்பியா, உகண்டா, மத்திய கயானு, அங்கோலா போன்றவற்றை உள்ளடக்கி ஏனைய நாடுகளில் அரசுக்கு மாறுபட்டோர் தூக்கிலிடப்பட்டனர்.

1977-78 காலப்பிரிவில் மனச்சாட்சி கைதிகளின் சார்பிலும் சித்திரவதை செய்யப்பட்டோரின் சார்பிலும் ஆபிரிக்க நாடுகள் தூக்குத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டோர், அச்சுறுத்தப்பட்டோர் சார்பிலும் அனைத்துலக மன்னிப்புக் கழகம் தொடர்ந்து தனது பணியைப் பேணி விரிவுபடுத்தியது. இவ்விதம் ஈடுபட்டிருக்கும் வேளையில் எம் அமைப்பு பல சிக்கலான சூழ்நிலைகளை எதிர்நோக்க வேண்டியிருந்ததோடு சிறைக் கைதிகள் பெருமளவு நன்மைபெறும் முறையில் பல வழிமுறைகளைக்

கையாளவேண்டியும் இருந்தது. எனவே சில நாடுகளில் தனி ஆட்கள் அடிப்படையில் சிறைக்கைதிகளுக்குதவ, விரிவான குழு அடிப்படையில் அனைத்துலக மன்னிப்புக்கழகம் செயற்படவேண்டியிருந்தது. இதன் விளைவாக 1978 யூன் முடிவில் ஆபிரிக்காவில் 1103 தனிப்பட்ட மனச்சாட்சி கைதிகளுக்காக இவ்வமைப்பு செயற்பட்டது. எனினும் பிடிக்கப்பட்ட சில வேளையில் சாகடிக்கப்படும் சிறைக் கைதிகளுள்ள உகண்டா, மத்திய கயானா போன்ற நாடுகளைப் பொறுத்த வரையிலும் பேரால் இனங்காணப்பட்ட நிலையில் துன்புறுத்தப்படும் சிறைக் கைதிகள் வாழும் எத்தியோப்பியாவை பொறுத்தவரையிலும் ஒரு புதிய வழிமுறையை அனைத்துலக மன்னிப்புக் கழகம் கையாண்டது. அதாவது மனித உரிமைகளை மீறுவதற்கு எதிர் நடவடிக்கையாக நாட்டு நடவடிக்கை தொகுப்புகள் வழிமுறையாகும். தனிப்பட்ட சிறைக்கைதிகளின் சார்பில் குரல் எழுப்புவதிலும் பார்க்க குறிப்பிட்ட நாடுகளில் மனச்சாட்சி கைதிகளின் சார்பில் தொடர்ச்சியாக அனைத்துலக மன்னிப்புக் குழுக்கள் பணியாற்றுவதற்கு ஏதுவாக இப்பதிவேடுகள் தொகுக்கப்பட்டன.

தென் ஆபிரிக்காவில் அரசியல் சிறை வாழ்வு ஜனவரி 78 இல் வெளியிடப்பட்ட அறிக்கையை உள்ளடக்கும் முறையில் இவ்வாண்டில் ஆபிரிக்காவை ஒட்டி பல அறிக்கைகளை அனைத்துலக மன்னிப்புக்கழகம் வெளியிட்டுள்ளது. மேற்குறித்தவை நீங்கலாக கயானாவைப் பற்றி விளக்கும் அனைத்துலக மன்னிப்புக்கழக வெளியீடும் சென்ற 78 யூனில் வெளியிடப்பட்டது. 1978 யூனில் உகண்டாவைப்பற்றியும் 1977 டிசம்பரில் எத்தியோப்பியா பற்றியும் அறிக்கைகளை இவ்வமைப்பு வெளியிட்டது. அத்துடன் தென் ஆபிரிக்காவிலும் உகண்டாவிலும் எத்தியோப்பியாவிலும் மனித உரிமைகள் மிகக் கடுமையாக மீறப்படுவதை ஒட்டி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பல அறிக்கைகள் ஒப்படைக்கப்பட்டன.[1]

## அமெரிக்கா

சட்டப்படி தூக்குத்தண்டனை தொடர்ந்து நிலவும் ஆங்கிலம் பேசும் அமெரிக்காவிலும் அரசியல் நோக்கங்களுக்காக வன்முறையால் கடத்திச் செல்லலை அடுத்து சித்திரவதையும், சாகடித்தலும், பொது வழக்காக இலத்தின் அமெரிக்காவில் இருப்பதையும் எதிர்த்து வாழ்வதற்குரிய உரிமையைப் பாதுகாப்பதை வலியுறுத்துவதற்காக (அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் அத்தியாயம் 3) 77-78 காலப் பிரிவில் அமெரிக்காவில் அனைத்துலக மன்னிப்பு கழகம் தொடர்ந்து பணியாற்றியது.

---

1. மத்திய கயானாவில் மனித உரிமைகள் மேலும் மீறப்படுவதைத் தடுப்பதற்காக ஆபிரிக்க ஒற்றுமை அமைப்புக்கு 1978 ஒக்டோபரில் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தூக்குத் தண்டனையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற தனது பணிக்கேற்ப தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவியல் சிறைக் கைதிகளின் சார்பில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசுகளின் ஆளுநர்க்கும் ஆங்கிலம் பேசும் கராபியன் நாடுகளின் அரசுகளுக்கும் பல வேண்டுகோள்களை அனைத்துலக மன்னிப்புக் கழகம் விடுத்துள்ளது. இலத்தீன் அமெரிக்காவில் சட்டப்படி மரண தண்டனை ஒழிக்கப்பட்டுள்ளது அல்லது நடைமுறையில் மிகக் குறைந்தளவே செயற்படுத்தப்படுகிறது. எனினும் இப்பகுதியில் மிகப் பெருமளவில் அரசியல் வன்முறையும் கடத்திச் செல்லல், மறைவுகள், சித்திரவதைகள், சட்டத்தை மீறிய தூக்குத் தண்டனைகள் அல்லது கொலைகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன. 1976 ஐ அடுத்து ஆர்ஜென்ரீனாவில் இறந்த அல்லது மறைந்தோரின் எண்ணிக்கை 15000 என மதிப்பிடத்தக்க அளவிலும் 73 ஐ அடுத்து சிலியில் மறைந்தோரின் எண்ணிக்கை 1500 அளவிலும் மெக்சிக்கோவின்[1] கிராமியப் பகுதிகளில் மேலும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கைகள் கொண்டோரை காணவில்லையென்று கூறும் அளவிற்கு மனித உரிமைகள் மீறல் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நிகழ்கின்றன.

அண்மை ஆண்டுகளில் இலத்தீன் அமெரிக்காவில் கௌத்தமாலாவில்தான் முதல் முறையாக மிகப்பெருமளவில் (1966 ஐ அடுத்து 20,000 பேர் கொல்லப்பட்டனர்) அரசியல் கொலைகள் ஏற்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் எல்சல்வாடோரிலும் நிர்கராகுவாவிலும் பல மறைவுகளும் கொலைகளும் ஏற்பட்டுள்ளன. அரச முகவர் நிலையங்களால் நடாத்தப்படும் சட்டத்தை மீறிய கொலைத் தண்டனைகள் மட்டுமல்ல ஆயுதம் தாங்கிய எதிர் குழுக்களால் நடாத்தப்படும் கொலைகளும் அனைத்துலக மன்னிப்புக் குழுவை பொறுத்த வரையில் கவலை தரும் நிகழ்ச்சிகளாகும்.

இத்தகைய அவசர பிரச்சினைகளைப்பற்றி பல தந்திகளை அனுப்புவது அனைத்துலக மன்னிப்புக் கழகம் கையாளும் ஒரு முறையாகும். இம் மாநிலம் முழுவதும் பரபுவழியான அனைத்துலக மன்னிப்புக் குழுவின் வேலை திட்டமிடப்பட்ட அவசர நடவடிக்கையால் நிறைவுசெய்யப்பட்டுள்ளது மற்றும் சில விடயங்களில் இவ்வழிமுறைகள் பல உயிர்களைக் காப்பாற்றவும் துணை புரிந்துள்ளன.

கடந்த ஆண்டில் அனைத்துலக மன்னிப்புக் கழகம் பராகுவே, உருகுவே ஆகிய நாடுகளில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட அரசியல் கைதிகளின் பிரச்சினையை மக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டோர் பற்றியும் அடைக்கப்பட்ட பின் மறைந்தவர்கள் என்று கூறப்படும் விடயத்திலும் பாகுபாடற்ற விசாரணை நடாத்துமாறு இவ்வமைப்பு வேண்டியுள்ளது. பிரசாரத் தேவைக்காகவும், தமது செயலாற்றின் அடிப்படைத் தேவைக்காகவும்

1. சிலியில் பயன்படுத்தப்படாத சுரங்கத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இறந்த 25 ஆட்களின் உடல்கள் பற்றி பக்கச்சார்பற்ற ஒரு புலனாய்வினை நடாத்துமாறு 1978 டிசெம்பரில் அனைத்துலக மன்னிப்புக் கழகம் ஒரு கோரிக்கையை விடுத்தது.



யுவாள் ரோல் வோக்கும் அலிஸ் ரொட்றிக்குயுசு டீ வோக்கும் தமது மூன்று பிள்ளைகளுடன் காணப்படுகின்றனர். ஆர்ஜென்தீனா அரச அலுவலர் மறுத்த நிலையிலும் 1977 ஒற்ரோபரில் ஜே அன்ரோல் வோக்கும் அவரின் மனைவியும் அவர்களின் இல்லத்தில் இருந்து சாதாரண உடை அணிந்த காவற் படையினரால தூக்கிச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர் என்பதற்கே சான்றுண்டு இரகசிய தடுப்புக் காவல் முகாம்களிலேயே இவர்கள் தொடர்ந்து வைத்திருக்கப்பட்டிருக்கின்றனர் என்றே நம்பப்படுகிறது.

படம்: அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின தனியுரிமை.

அனைத்துலக மன்னிப்பு சழகம் பராகுவேயிலும், உருகுவேயிலும் சித்திர வதைக்குள்ளாகி இறந்த ஆட்களின் வரலாற்றினை சிறு வெளியீடுகள் வாயிலாக வெளிக்கொணர்ந்தன. நாட்டில் மனித உரிமைகள் பறிக்கப்படுவது பற்றி எழுந்துள்ள பாதகமான சூழ்நிலையை குறிப்பாக ஆட்கள் மறைவது பற்றியும், சித்திரவதைக்குள்ளாக்கப்படுவது பற்றிய தன்மையையும் எடுத்துக்காட்ட 1978 யூனில் ஆஜென்ரீனவில் நடைபெற்ற உலகக் கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்டப் போட்டியை இவ்வமைப்புப் பயன்படுத்தியது.

சித்திரவதை தடுக்கப்படவேண்டுமாயின் தமது அதிகாரங்களை பிழையான வழியில் பவன்படுத்தும் அலுவலர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வருத்தத்தக்க விடயம் யாதெனில் அரசு மாறினல் அன்றி இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. எனினும் சென்ற ஆண்டில் கொண்டுராசுவிலும், பேருவிலும் இத்தகைய இரு விசாரணைகள் நடைபெற்றன. இவ் அறிக்கையின் பிற்பகுதியில் அவை விளக்கப்பட்டுள்ளன. சிலியில் அரசியல் கைதிகளை பிடித்தல், துன்புறுத்தல், கொலை செய்தல் போன்ற பொறுப்புக்களில் இருந்து காவற்றுறை படைத்துறை அலுவலர்களை விடுவிப்பதென்று 78 மேயில் அனைத்துலக மன்னிப்புக் கழகம் பிரகடனஞ் செய்தது. ஏனைய நாடுகளில் எடுத்துக்காட்டாக எல்சல்வடோர் உருகுவே போன்ற நாடுகளில் அதிகாரிகளுக்கெதிராக மக்கள் முறைப்பாடுகளை அல்லது தவறுகளை அறிவிப்பின் மக்கள் மீது குற்றவியல் வழக்கை தொடுப்பதற்கு உரித்தாக்குவதற்கும் 5 ஆண்டுகள் வரை சிறையில் வைத்திருக்கப்படும் நிலையும் இருந்தது.

சில நாடுகளில் போர் முற்றுகைக்காலம் அல்லது அவசர காலச் சட்டம் நிலவிய காலத்தில் விசாரணையின்றி சித்திரவதைக்காளாக்கல் மறைவாகத் தடுப்புக்காவலில் வைத்தல் ("மறைத்தல்" நீண்ட கால அடிப்படையில் சிறை வைத்தல் போன்ற நிகழ்ச்சிகள்) நடைபெற்று உள்ளன. கடந்த ஆண்டில் ஆஜென்ரீன, பொலிவியா, சிலி, கொலம்பியா, நிக்காருக, பராகுவே, பேரு, உருகுவே போன்ற நாடுகளின் அரசுகள் இத்தகைய அவசரகாலச் சட்டத்தை நாடி நின்றன. விசாரணையின்றி நீண்ட காலம் தடுப்புக்காவலில் வைத்திருக்க இச்சட்டம் துணை நின்றது. (குறிப்பாக பராகுவே) விசாரணையின்றி நீண்ட காலம் தடுப்புக்காவலில் வைத்தல் வெரும்பாலும் எவ்வித தொடர்பும் அற்றதன்மை, நீதி மன்றங்கள் தலையிடாத தன்மை, தண்டனைக் காலம் முடிவுற்றபோதும் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்தல் (குறிப்பாக உருகுவேயில்) போன்றவற்றிற்கு இத்தகைய சட்டம் வழி வகுத்தது. அதேவேளையில் இத்தகைய அவசரகால சட்டத்தில் நாடு கடத்தலுக்குப் பதிலாக சிறை வாழ்வை ஏற்றலுக்கு இடமளிக்கப்பட்டது. எனினும் இத்தகைய முன்விருப்பு உரிமையை சில கைதிகளைப்

பொறுத்தவரை தற்காலிகமாக நிறுத்தப்படும் அல்லது இல்லாமல் செய்யப்படும். (எடுத்துக்காட்டாக ஆஜென்ரீனுவிலும் உருகுவேயிலும் இது நடைபெற்றது.) இலத்தீன் அமெரிக்காவில் அனைத்துலக மன்னிப் புக் கழகத்தினுல் கையேற்கப்பட்ட கைதிகள் இத்தகைய தடுப்புக் காவலில் வைத்திருக்கப்பட்டனர்.

இலத்தீன் அமெரிக்காவில் இத்தகைய அரசியல் கைதிகளின் எண் ணிக்கை தொடர்ந்தும் பெருகிக்கொண்டேயிருக்கிறது. அரசியற் கட்சி களை தடைசெய்தல், (சிலியிலும், உருகுவேயிலும் போன்று) தொடர்பு களைத் தடுத்தல், தொழிற்சங்க இயக்கங்களைக் கட்டுப்படுத்துவதோடு வேலைநிறுத்தங்களைத் தடை செய்தல் (ஆஜென்ரீனு, பொலிவியா, கொலம்பியா, ஈசாடே, பேரு) போன்ற பிரகடனஞ் செய்யப்பட்ட அனைத்துலக மனித உரிமைகளுக்கு மாறுன அரச வழிமுறைகளையும் இவை உள்ளடக்கும். புரட்சிக்கு எதிராக செயல்புரிவோர் என கைதி கள் பலரை கியூபா சிறையில் வைத்திருக்கின்றது.[1] உலகின் எப்பாகத் திலும் கூடிய காலம் சிறைக் கைதிகளாக வைத்திருக்கப்பட்டிருப்ப தாக இவ்வெண்ணிக்கை அமைந்திருக்கிறது.

மீளாய்விற்குரிய இக்காலப்பிரிவில் அனைத்துலக மன்னிப்புக் கழகம் புலனுய்விற்கு அல்லது நடவடிக்கைக்கு இலத்தீன் அமெரிக்காவில் 468 புதிய வழக்குகளை எடுத்துள்ளது. இவற்றுள் பெரும்பாலானவை ஆயென்ரீனு, நிகராவுவ, பேரு, உருகுவே, போன்ற நாடுகளிலிருந்து பெறப்பட்டவையாகும். கடந்த ஆண்டில் பொலிவியா, சிலி, கையிட்டி ஆகிய நாடுகளில் மன்னிப்புகள் பற்றி அறிவித்தமையை இது வரவேற் றது. இவை ஒவ்வொன்றும் இவ்வமைப்புப் பொறுப்பேற்ற கைதிகளை விடுவிக்கச் செய்தது.[2]

கடந்த ஆண்டிற்கூட அனைத்துலக மன்னிப்புக்கழகம் பொலிவியா, பிரேசில், கியூபா, மெச்சிக்கோ, பேரு ஆகிய நாடுகளுக்குத்[3] தமது தூதுக்குழுக்களை அனுப்பி இந்நாடுகளின் மனித உரிமைகள் பிரச்சினை கள் பற்றி அரசியல் நீதித்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. ஆயென்தீனு, டொமினிக்கன் குடியரசு, எல்சல்வடோர் பராஞுவே ஆகிய நாடுகளில் பிரசாரங்களைத் தொடங்கி நிகாரகுவா வைப்பற்றி[4] ஒரு முக்கிய அறிக்கையை அனைத்துலக மன்னிப்புக் கழகம் வெளியிட்டது.

---

1. எனினும் 1978 நவெம்பரில கியூபா அரசு ஒரு மாதத்திற்கு 400 பேர் என்ற அடிப் படையில் 3500 பேரை விடுவிப்பதாக அறிவித்தது. 1978 செத்தெம்பரில் அன் ரோனியோ குஸ்மன் டொமினிக்கன் குடியரசின் புதிய தலைவர் ஒரு பொது மன் னிப்பினை அரசியல் கைதிகளுக்குப் பிரகடனம் செய்தார்.

2. எனினும் கையிட்டியைப் பொறுத்தவரையில் காணுமல்போன 7 கைதிகளைப்பற்றி தெளிவுபடுத்துமாறு அரசை வேண்டியது தடுப்புக் காவலில் இருந்தபோது சுட் டுக் கொல்லப்பட்டனர் என்ற அச்சத்தின்பேரிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப் பட்டது.

3. மெச்சிக்கோ அரசின் மன்னிபுச் சட்டத்தையடுத்து பட்டியலிலுள்ள மறைந்த 360 பேர் பற்றித் தகவல் தரும்படி அனைத்துலக மன்னிப்புக் கழகம் நெருக்கியது.

4. நிகாரகுவாவில் 1978 செத்தெம்பரில் நடைபெற்ற கிளர்ச்சியின்போதும் அதன் பின்பும் மனித உரிமைகளை மீறி அரசின் படைகள் செய்த கொடுமைகளை அனைத் துலக மன்னிப்புக் கழகம் கண்டித்தது. குறிப்பாகத் திரும்பி வந்து கொண்டிருந்த அகதிகளை தேசிய காவற்படைகள் சாகடித்ததைக் கண்டித்தது.



சன் சல்வாடோ பல்கலைக்கழக முகாமில் (1977) ஒரு படையின் தாக்கல்.

படம்: அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் தனியுரிமை.

அமெரிக்க நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் மீதான அமெரிக்காவிற்கிடையிலான அமெரிக்க ஆணைக்குழுவுடன் அனைத்துலக மன்னிப்புக்கழகம் தொடர்ந்தும் ஒத்துழைத்து வந்துள்ளது. அத்துடன் சென்ற ஆண்டு மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவிற்கு இவ்வமைப்பு ஒப்படைத்த அறிக்கைகள் அமெரிக்காவைப்பற்றியதாகவே அமைந்தது.

சென்ற ஆண்டின் மனித உரிமைகளின் பாதுகாப்பிற்காக அனைத்துலக அடிப்படையில் செய்யப்பட்ட முடிவுகளை அமெரிக்க நாடுகள் உறுதிசெய்தமை ஊக்கம் தருவதாக அமைகிறது. 1977 நடுப்பகுதி வரை மனித உரிமைகள் மீதான அமெரிக்க தீர்மானத்தை கொஸ்ராறிக்காவும், கொலம்பியாவும் உறுதிப்படுத்தின. ஆனால் இத்தீர்மானம் வெனிசுலா, கவுண்டுராஸ் கயிற்றி, ஈகுவடோர், டொமினிகன் குடியரசு குவாட்டமாலா, பனாமா, ஒல்சல்வடோர், கறினடா ஆகிய நாடுகள் உறுதிப்படுத்தியதால் நடைமுறைக்கு வந்துள்ளது. 1977 யூலை 1978 யூன் ஆகிய காலப்பிரிவினை உள்ளடக்கும் இவ்வறிக்கையில் குடியியல், அரசியல் உரிமைகளான அனைத்துலக கூட்டொப்பந்தம் அமெரிக்காவினால் கையொப்பமிடப்பட்டு டொமினிக்கன் குடியரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்வரும் 14 நாடுகள் சட்டப்படி கூட்டொப்பந்தத்திற்குள் கட்டுப்பட்டுள்ளன. பாபடோஸ், சிலி, கொலம்பியா, கொஸ்ராறிக்கா, டொமினிக்கன் குடியரசு, ஈகுவடோர், எல்சல்வடோர், கவுண்ராஸ், ஜமேக்கா, பனாமா, பேரு, சூறினம், உருகுவே, வெனிசூலா.[1]

1. எதேச்சதிகார தடுப்புக்காவலிலிருந்தும் தூக்குத் தண்டனையிலிருந்தும் தப்பி அருகிலுள்ள நிகாரவலாலிலிருந்தும் ஓடிவந்த 1000 இற்கும் மேற்பட்ட அகதியுற்ற அகதிகளுக்கு'இன்குரான் செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிய மிகப்பெரும் பணிகளை மன்னிப்பு கழகம் விதந்துரைத்தது



1977 திசெம்பரில் புரூ தீவில் இருந்து விடுவிக்கப்பட்ட இந்தோனேசியக் கைதி தான் தடுப்புக் காவலில் இருந்தபோது பூப்பெய்திய தன் மகளுடன் இணைக்கப்படுகிறார்.

## ஆசியா

கடந்த ஆண்டில் சிறைக் கைதிகளாக வைத்திருந்த பலரை, பல ஆசிய நாடுகள் விடுவித்துள்ளன. எனினும் இன்னும் பலர் நீண்ட காலத்திற்கு விசாரணையின்றி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக இந்தோனேசிய அரசாங்கம் 1977 திசெம்பரில் 10,000 அரசியல் கைதிகளை விடுவித்துள்ளதாக அறிவித்துள்ளது. இவர்களில் பலர் பன்னிரண்டு ஆண்டுகட்டு மேலாக எதுவித விசாரணையுமின்றி சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். விசாரணைக்குட்படுத்தப்படாத மிகுதிச் சிறைக்கைதிகளை-10,000 என மதிப்பிடப்பட்டுள்ள இத்தொகையை-1979 முடிவில் விடுவிப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இது எதனை எடுத்துக்காட்டுகின்றதெனின் மிகுதியாக உள்ள பல அரசியல் கைதிகள் (விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள கைதிகளின் பின்னணியே இவர்களின் பின்னணியுமாகும்) சிறையிலிருந்து விடுவிக்கப்படக்கூடியவர்கள். விடுவிக்கப்பட வேண்டியவர் என அரசினுல் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கைதிகளில் பலர் 13 அல்லது 14 ஆண்டு சிறையில் வாழவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

ஆசியாவின் ஏனைய பகுதிகளில் சிறைக்கைதிகளை விடுவிப்பதோடு ஆட்களை புதிதாக அல்லது மீளக் கைது செய்வதற்கு சான்றுண்டு. கொரியாக்குடியரசை (தென் கொரியாவை)ப் பொறுத்தவரை "அடிப்படை உரிமைகளை மீளத்தருக" எனக் குரல் எழுப்பியோரை 1976 ஐ அடுத்து அடைக்கப்பட்டோர் பின்பு இறுதியில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் மாணவர்கள், தொழிலாளிகள், போன்ற ஏனையோர் தொடர்ந்தும் சிறையில் இருக்கின்றனர். சென்ற ஆண்டில் அடைக்கப்பட்ட சிம்சிகா போன்ற பெயர் பெற்ற கவிஞரையும் ஏனைய கைதிகளையும் அரசிற்கெதிராக கருத்துத்தெரிவித்தனர் என்ற காரணத்திற்காக அவர்களை விடுவிக்க அரசு மறுக்கிறது. இன்றுள்ள அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்; அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்றும் மாணவர்களால் அண்மையில் எழுப்பிய கிளர்ச்சி காவற்படையினால் முறியடிக்கப்பட்டு கணக்கிடமுடியாத மாணவர்கள் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

காலந்தோறும் பிலிப்பைன்சிலும், வங்காள தேசத்திலும் தடுப்புக் காவலில் உள்ளோருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்சில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தோர் விடுவிக்கப்பட்டதோடு புதிதாக வேறு பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். அத்துடன் கேள்வி முறையின்றி பல கைதிகள் சாகடிக்கப்பட்டுள்ளனர், என அதிகரித்த குற்றச்சாட்டுக்கள் கிடைத்துள்ளன. வங்காள தேசத்தில் 1977 செத்தெம்பர் ஒற்றோபரில் நிகழ்ந்த இரு வெற்றிபெருத படைக்கிளர்ச்சிகளை அடுத்து சதி முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி 130 இற்கு மேற்பட்ட கைதிகளை அரசு தூக்கிலிட்டது. இவ்விதம் தூக்கிலிடப்பட்டோர் எண்ணிக்கை பல நூற்றுக் கணக்காகும்.

கம்பூச்சியா குடியரசிலிருந்தும் (கம்போடியா) அகதிகளாக வந்தோர் சாகடிப்பது பற்றியும் சிறையிலிடப்படுவது பற்றியும் தொடர்ந்து பேசிவருகின்றனர். தனது நாட்டிற்குள் நடுநிலை வகிக்கும் அனைத்துலக பார்வையாளர்கள் வருகை தருவதைத்தடுத்ததோடு 1978 மார்ச்சில் துன்புறுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டப்படும் நிகழ்ச்சிகளை ஒட்டித் தகவல் தரும்படி மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் ஆணைக் குழுவினால் (ம. உ. ஐ. நா. ஆ.) வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் கொடுக்கப்படவில்லை.

மனித உரிமைகளை ஒட்டி கொரிய மக்கள் ஆட்சிக்குடியரசு (வடகொரியா) விதித்துள்ள கடும்தடைகள் மனித உரிமைகள் மீறப்பட்ட செய்தியை வெளி உலகம் அறிய முடியாமல் செய்துள்ளது. மனித உரிமைகள் மீறப்பட்டது பற்றி தகவல்களை தரத்தடுக்கும் மற்றைய நாடு பர்மாவாகும். மிகப்பெருமளவான முஸ்லீம் கைதிகள் வங்காள தேசத்திற்குக் குடிபெயர்ந்து சென்றமை மனித உரிமைகள் மீறப்படுவதன் அளவினை எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த ஆண்டில் மக்கள் சீனக்குடியரசில் அரசியலுக்காகவும், ஏனைய காரணங்களுக்காகவும் கட்சித்தலைவர்கள் பிடித்தடைக்கப்பட்டுள்ளனர். அதே வேளையில் தேசிய அரசியல் தகராறில் ஏதோ ஒரு பக்கத்திற்கு உரியவன் என்ற முறையில் முன்பு தடுப்புக்காவலில் வைக்

கப்பட்டிருந்த கட்சித்தலைவருக்கும் ஏனையோருக்கும் அரசியல் மறு வாழ்வு வழங்கப்பட்டுள்ளது. பொது அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரிலும், அரசியல் குற்றவாளிகளைத் தண்டிக்கிறோம் என்ற பெயரிலும் தூக்குத்தண்டனையைத் தொடர்ந்து சீன அரசு கையாளு வது கவலைக்குரிய விடயமாக விளங்குகின்றது. அரசியல் குற்றங்களுக் காகவும் ஏனைய பொதுக் குற்றங்களுக்காகவும்[1] உடனடியாகத் தூக்குத் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக சீனாவின் பல பகுதிகளி லிருந்தும் செய்திகள் கிடைத்துள்ளன.

வியட்நாமில் "அரசியல் மீள் கல்வி" புகட்டப்படுகிறார்கள் என்ற பெயரில் 10,000 மேற்பட்ட மக்களை வியட்நாம் அரசு சிறையில் வைத் துள்ளது. 1975 மேயில் தேயூ அரசு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு மீள் கல்வி இருக்கும் என வியட்நாம் அதிகாரிகள் முன்பு எடுத்துரைத்தனர். ஆனால் குறிக்கப்பட்ட காலம் கடந்த நிலையில் கூட பலர் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படு வது கவலையைத் தருகிறது.

பாகிஸ்தானின் புதிய போர்க்கால சட்ட அரசு அரசியல் எதிர்ப் பினைக் கட்டுப்படுத்துவதற்கு பல வழிமுறையைக் கொண்டுவந்துள்ளது. அரசியல் கைதிகளின் எண்ணிக்கை மிக அதிகரித்து பல ஆயிரக்கணக் கில் இருக்கிறது. அமைதியான அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொண்டோர் எனப் பிடிக்கப்பட்ட ஆகக்குறைந்த 160 அரசியல் கைதி களுக்கு கசையடி கொடுக்கப்பட்டது. அரசியற்கட்சி செய்தி இதழை மூடியதற்கெதிராக உண்ணாநோன்பினை (விரதம்) மேற்கொண்டதற் காக ஏறக்குறைய 150 செய்தியாளர்களும், செய்தியிதழ் தொழிலாள ரும் சிறையில் அடைக்கப்பட்டனர். போர்க்கால அரசு களவெடுப் பதற்குத் தண்டனையாகக் கையை வெட்டுவது என்ற சட்டத்தைக் கொண்டுவந்தது.

கடந்த இரு ஆண்டு காலங்களில் மலேசியாவிலும் நீண்டகாலமாக விசாரணையின்றி தடுப்புக் காவலில் பல கைதிகள் வைக்கப்பட்டுள்ள னர். அண்மையில் அடைக்கப்பட்டோரில் பலர் முக்கிய அரசியல் தலைவர்களாவர். உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழேயே மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தானவர்கள் என்ற பெயரில் தனது பரந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களை அடைக்கிறது சிங்கப்பூர் அரசு. விசாரணையின்றி நீண்ட காலத்திற்குப் பல அரசியல் கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர். கல்தான் ரீ புறுநையில் 13 அரசியல் கைதிகள்

---

1. பல ஆண்டு ஆராய்ச்சியின் முடிவாக மக்கள் சீனக் குடியரசின் அரசியல் கைதிகள் பற்றி ஒரு பெரும் அறிக்கையை அனைத்துலக மன்னிப்பு கழகம் 1978 நவெம்பரில் வெளியிட்டது.

மிக நீண்ட காலத்திற்குத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் 14 ஆண்டுகளுக்கு மேலாக விசாரணையில் வைக்கப்பட்டுள்ளனர்.

1978 ஏப்பிறலில் ஆப்கானிஸ்தானில் படை சதி செய்து முன்னைய குடியரசுத்தலைவரையும், அவரின் குடும்பத்து உறுப்பினர் பலரையும் சாகடித்ததோடு மிகப் பெருமளவு மக்கள் அரசியல் காரணங்களுக்காக கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்த ஆண்டில் அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் பேராளர்கள் இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு வருகை தந்து இந்நாடுகளில் மனித உரிமைகளின் நிலைபற்றி இவ்வரசுகளின் உறுப்பினருடன் உரையாடல் நடத்தியது. ஆசியாவில் பல அரசியல் கைதிகள் வைத்திருக்கப்பட்டிருப்பதனால் தனி வழக்குகளில் பிரதி நிதித்துவத் தெரிவினை நடத்துவது அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் வழிமுறையாகும். குறிக்கப்பட்ட நாடுகளில்[1] உள்ள வகைப்படுத்தப்பட்ட கைதிகளுக்குப் பொதுத்தூண்டுதல் அடிப்படை உதவுவதும் கழகத்தின் பணியாக அமைந்துள்ளது.



படத்தில் காணப்படுபவர் பள்ளித் தலைவி "அர்ச்சனுகுக" என்பவர். அனைத்துலக மன்னிப்புக் கழகத் தூதுக் குழுவினால் செவ்வி காணப்பட்ட இவர் காவற்படையின் கொடூர நடவடிக்கையினால் இடுப்பிற்குக் கீழ் இயல் ஆற்றலின்றி இருக்கின்றார். அரசியலில் தீவிரமாக இருக்கிறார் என்று தெரியாத நிலையில்கூட கல்கத்தா லால் வசா காவல்நிலைய மேலதிகாரிகளினால் 1974 யூலையில் இவர் சிறையிலிடப்பட்டு மிகக் கொடுமையாகத் தாக்கப்பட்டு நெருப்பினால் சுடவும் பட்டார். தடுப்புக்காவலில் இருந்த போது படிப்படியாகத் தனது கால்கள் இயங்க முடியாத நிலையை அடைந்தபோதும் பிடிக்கப்பட்டு 18 மாதங்கள் வரை இவர் அழைத்துச் செல்லப்படவில்லை 1977 மேயில் இவர் மீது விதிக்கப்பட்ட தடுப்புக்காவல் கட்டளை நீக்கப்பட்டது.

---

1. 1978 ஒக்தோபரில் ஆ கானிஸ்தானுக்கு வருகை தந்துள்ள அனைத்துலக மன்னிப்புக் கழகம் விசாரணையின்றியோ குற்றச் சாட்டின்றியோ வைத்திருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்கும்படி வேண்டியுள்ளது.

1977-78 இல் வங்காளதேசம், பிலிப்பைன்,இந்தோனேசியா, தாய் வான், தாய்லாந்து ஆகிய நாடுகளின் கைதிகள் சார்பில் அனைத்துலக பிரச்சாரத்தை அனைத்துலக மன்னிப்புக் கழகம் நடத்தியது. அத்துடன் தென் கொரியா மலேசியா புருணை போன்ற நாடுகளின் சார்பில் குரல் எழுப்பி நடவடிக்கை எடுத்துள்ளது. இதே காலப்பிரிவில் இந்தோனே சியா, பாகிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகள் பற்றி இவ் வமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

## ஐரோப்பா

கடந்த ஆண்டில் (1977 யூலை) ஐரோப்பாவில் அனைத்துலக மன்னிப் புக் கழகம் கையேற்ற மனச்சாட்சிக் கைதிகளில் பெரும்பான்மையோர் ஐக்கிய சோவியத் சமவுடைமைக் குடியரசு ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பாவின் சில நாடுகளிலும் இருந்தனர். இந்நாட்டு அதிகாரி களால் ஒப்புதலளிக்கப்படாத மனித உரிமைகளை நிலைநாட்ட விரும்பு வோருக்கு சிறையிடும் சட்டம் தொடர்ந்தும் இருந்தது. கடந்த இரு ஆண்டுகளாக ஐரோப்பாவின் பாதுகாப்பு ஒத்துழைப்பு மாநாட்டின் இறுதிச் சட்டத்திற்கு அமைய செயற்பட்ட ஐரோப்பிய அரசுகளின தும் மனித உரிமைகளைச் செயற்படுத்தும் ஐக்கிய நாடுகளினதும் மனித உரிமைகளை நிலைநாட்டும் இயக்கங்கள் ஐக்கிய சோவியத் சமவுடை மைக் குடியரசு ஒன்றியம், போலந்து, செக்கோசிலாவாக்கியா, உறு மோனிய போன்ற நாடுகளில் தீவிரமாக இயங்கின. இந்நாடுகளில் இவ் வியக்கங்களில் கலந்து கொண்டோர் மனச்சாட்சிக் கைதிகளாக்கப்பட் டனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை நாட்டிற்கு நாடு வேறு பட்டது. ஐ. சோ. ச கு. ஒ. திலும், செக்கோசிலாவாக்கியாவிலும் சிறையிடப்பட்ட கெல்சிங்கி மொனிட்ரோசுக்கும் பட்டய ஆதரவாள ருக்கும் நீண்ட காலச் சிறை விதிக்கப்பட்டது. போலந்திலும், ரூமேனி யாவிலும் மனித உரிமைகளுக்காகச் செயற்பட்டோர் சிறிது காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதோடு (சிலரைப் பொறுத்தவரையில் அடிக்கடி இந்நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்) காவல் துறையினால் துன் புறுத்தப்பட்டனர் என்றும் அடிக்கடி முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சமய தேசிய துறையில் மாறுபட்டோரையும், வெளியேற இருப்ப வரையும் தங்கள் குடியரசில் உரிமைகளை நிலைநாட்டும் மரபு வழி பேண மறுக்கும் எழுத்தாளரையும் தொடர்ந்து சிறையில் வைத்த ஐ. சோ. ச. குடியரசு அரசியல் காரணங்களுக்காக மனோதத்துவ இழிமுறைகளும் பயன்படுத்தப்பட்டன. இவ்வழிமுறைகள் தவறென அனைத்துலக அதிகாரிகள் கண்டித்த நிலையிலும் மேற்குறித்த வழிமுறைகள் கையா ளப்படுகின்றன. சென்ற ஆண்டுகள் போல் சேர்மன் மக்களாட்சிக் குடியரசில் உள்ள கைதிகளைப்பற்றி பெருமளவு புதிய வழக்கு ஆவணங் களை அனைத்துலக மன்னிப்புக் கழகம் ஒப்படைத்தது. அரசின் இசை வின்றி நாட்டை விட்டு வெளியேற முனைந்தவர்கள் சிறையிலிடப்பட்ட

வேளையில் தம் பேச்சுரிமையை நிலைநாட்ட முனைந்த பலர் சென்ற ஆண்டிலும் பார்க்கக் கூடியளவில் சிறையிடப்பட்டிருந்தமை அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் கவனத்திற்குக் கிடைத்துள்ளது. 1977 ஒற்றோபரில் அனைத்துலக மன்னிப்புக் கழகம் சேர்மன் மக்கள் ஆட்சிக் குடியரசு பற்றி ஒரு குறிப்பினை வெளியிட்டது. ஒரு மகிழ்ச்சி தரும் போக்கினை எடுத்துக்காட்டும் வகையில் 1977 நவெம்பரில் யூகோஸ்லாவியாவில் மன்னிப்பு அளிக்கப்பட்ட முறையில் 218 கைதிகள் விடுவிக்கப்பட்டனர். 'எனினும் அரசியல் விசாரணைகள் தொடர்ந்தும் இவ்விடத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ருமேனியாவில் குறுங்கால தடுப்புக் காவலையும் உள்ளடக்கி கங்கேரி, ஜெர்மன் நாட்டுச் சிறுபான்மை மக்களின் சில உறுப்பினர்கள் கொடிய வழிமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அத்துடன் தடுப்புக் காவலில் இருந்த போது காவற்படையினரால் துன்புறுத்தப்பட்டனர், என்னும் குற்றச்சாட்டும் கிடைத்தள்ளது. பல்கேரியாவில் தமது சமய பண்பாட்டு உரிமைகளுக்கு மாறுக விதிக்கப்படும் அரசின் தடைகளுக்கு இணங்கிச் செயற்பட மறுத்த முஸ்லீம்கள் பலர் (பொமாக்ஸ்) இன்னும் சிறையில் இருக்கின்றனர்.[1]

மேற்கு ஐரோப்பாவில் படைப்பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்த மனச்சாட்சிக் கைதிகளே அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் பணிக்குட்பட்டவர்களாக விளங்கினர். கட்டாயமாக படைப்பணியில் ஈடுபடுத்தாது ஏனைய பதிலீட்டுப் பணியில் சில குறிப்பிட்ட மனச்சாட்சி எதிர்ப்பாளரை வைத்திருப்பதற்கான சட்டங்களை பிரான்ஸ் கிரேக்கம் இத்தாலி, சுவிற்சலாந்து, ஸ்பெயின் போன்ற நாடுகள் கொண்டிருக்கின்றன. சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசின் (ஜே. இ. கு.) பணிக்கு மாற்றீடாக வேறுதுறையில் மனச்சாட்சிச் எதிர்ப்பாளர்கள் பணிபுரிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு ஒரு ஆண்டிற்குள்ளேயே இடைநிறுத்தச் செய்யப்பட்டதோடு மனச்சாட்சி அடிப்படையில் எதிர்ப்புத் தெரிவிப்போரின் உள்நோக்கை அறிய சபைகள் அமைப்புமுறை தற்காலிகமாக மீண்டும் கொண்டுவரப்பட்டது.

சுவிர்ச்சலாந்தில் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட மக்கள் தீர்ப்பு மாற்றுப்பணி உருவாக்கப்பட வேண்டும் என்ற எடுத்துரைப்பினை நிராகரித்தது. இவ்வெடுத்துரைப்பு இக்கோட்பாட்டினை எதிர்ப்போரால் மட்டுமின்றி மனச்சாட்சி அடிப்படையில் எதிர்ப்புத் தெரிவிப்போரின் அரசியல் காரணங்களுக்கும் உரிய இடம் தரவில்லை என்ற அடிப்படையில் மற்றையோரலும் எதிர்ப்பார்க்கப்பட்டது. சோவியத்

---

1. 1978 ஒற்றோபரில் "அரசுக்கெதிரான ஆவணங்களை வைத்திருந்ததோடு வழங்கியது" என்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட மூவர் சார்பில் விசாரணைக்கு செக்கோஸ்லாவாக்கியாவிற்கு வருகைதந்து அனைத்துலக மன்னிப்புக் கழகப் பேராளர் ஐந்து மணித்தியாலங்கள் காவற்படையினரால் தடுக்கப்பட்டு விசாரணையைக் காணவிடாது தடுக்கப்பட்டனர். மூன்று குற்றவாளிகள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது.

சமவுடைமைக் குடியரசுகளின் ஒன்றியமும் மற்றும் எல்லா கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் படைபணியில் சேர எதிர்ப்புத் தெரிவிக்கும் மனச்சாட்சியாளரைச் சிறைப்படுத்த சட்டங்கள் வைத்துள்ளன.



"தீங்கு விளைவிக்கும் மருந்து" எனும் நூலை வரைந்த சோவியத் குடியுரிமை இயக்கத்தில் தீவிரமாக உழைத்த அலெக்சான்ரு பெட்ரா வினிக்கை கே. ஜி. வி. முகவர்கள் 1978 மேயில் அழைத்துச் செல்கின்றனர். மூன்று மாதங்களுக்குபின் ஐந்தாண்டுகளுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

படம் தனியுரிமையுடையது உரிசிய தேவாலய நிதி உதவிக்கு உரியது.

மனித உரிமைகளை மதிப்பதை வலியுறுத்தும் சீர்திருத்தங்கள் சென்ற ஆண்டு ஸ்பெயினிலும் போர்த்துக்கல்லிலும் தொடர்ந்தும் நடைபெற்றன. 1977 ஒற்ருேபரில் அனைத்துலக மன்னிப்புக்கழகம் கையேற்ற ஏறக்குறைய எல்லா மிகுதிக் கைதிகளையும், புலனாய்விற்குட்படுத்தப் பட்ட கைதிகளையும் உள்ளடக்கும் முறையில் பல்வகை அரசியல் கைதிகளுக்கு மற்றுமொரு மன்னிப்பை அளித்து ஸ்பெயின் விடுதலை செய்தது. எனினும் சில அரசியல் அல்லது படை அலுவலர்களை இழிவுபடுத்

தல் என்ற குற்றத்தின் பேரில் சிறையிலிடும் சட்டங்களை இவ்விரு நாடுகளும் தொடர்ந்தும் வைத்திருந்தன. வன்முறையற்ற நிலையில் எடுத்துரைக்கும் ஒரு கருத்தினையே குற்றம் எனக் கணித்தல் கவலைக்குரிய விடயமாகும். 1974 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு தூக்குத் தண்டனையை யொட்டி ஒரு கேலி நாடகத்தில் படை மேலலுவலாளரை இழிவுபடுத்தியது என்ற பெயரில் குற்றம்சாட்டப்பட்ட ஒரு தொகுதி மக்கள் ஸ்பெயினில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது ஒரு பார்வையாளரை அனைத்துலக மன்னிப்புக் கழகம் அனுப்பியது. இவ்வழக்கில் சிறைப்படுத்தப்பட்ட அனைவரையும் மனட்சாட்சிக் கைதிகள் என அனைத்துலக மன்னிப்புக் கழகம் கையேற்றது. போர்த்துக்கல்லில் அதிகாரிகளை இழிவு படுத்தியது என்ற குற்றச்சாட்டில் பல செய்தி இதழ் ஆசிரியர்கள் மீது தனித்தனி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

துருக்கியில் அனைத்துலக மன்னிப்புக் கழகத்தினால் கையேற்கப்பட்ட பலர் விடுவிக்கப்பட்டனர். எனினும் பொதுவுடைமை நடவடிக்கையில் ஈடுபட்டோர் என்ற குற்றச்சாட்டின்பேரில் குற்றவியல் வழக்கு அவர்கள் மீது தொடர்ந்தும் வழக்குகள் தொடரப்படுவதும், சமய அரசியல் நடவடிக்கைகளுக்காக மக்கள் சிறைப்படுத்தப்படும் முறையில் சட்டம் தொடர்ந்து இருப்பதும், குறுங்காலத் தடுப்புக் காவலில் இருப்போர் துன்புறுத்தப்படுவதும் அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் கவலைக்குரிய விடயங்களாக இருக்கின்றன. 1928 முதற்பகுதியில் இவ்விடயங்களை ஆராய்வதற்காக அனைத்துலக மன்னிப்புக் கழகம் ஒரு தூதுக் குழுவை துருக்கிக்கு அனுப்பியது. இவ்விடயங்களையொட்டி தமது கவலையினை அரச அலுவலர்க்குத் தெரிவிப்பதும் இத் தூதுக் குழுவின் நோக்கமாக இருந்தது.

மேற்கத்திய நாடுகள் பலவற்றில் பயங்கரவாத நடவடிக்கைகள் நடைபெறுவது மனித உரிமைகளுக்கு பெரிய அறைகூவலாக விளங்குகின்றது. வட அயர்லாந்தில் அரசியல் தூண்டுதலின் பேரில் நடைபெறும் பயங்கரவாத நடவடிக்கை அயர்லாந்து சமுதாயத்திலுள்ள வெவ்வேறு பிரிவுகளுக்கிடையில் அடிக்கடி நிகழும் தகராறாக விளங்குகின்றதோடு குடிமக்கள் மீதும், பாதுகாப்புப்படை உறுப்பினர்கள் மீதும் தற்காலிக அயர்லாந்து குடியரசுப்படை தாக்குதல்களையும் நடத்திக் கொண்டிருக்கின்றது. துருக்கியில் இடதுசாரிக் குழுவும், வலதுசாரிக் குழுவும் ஒழுங்காகத் தமக்குள்ளே முட்டிமோதிக் கொள்கின்றன. இவ்விரு நாடுகளிலும் நடைபெறும் அரசியல் கொலைகளும், துன்புறுத்தல்களும் இத்தாலியிலும் சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசிலும் ஸ்பெயினிலும் நடைபெறும் மனித உரிமைகள் மீறலை ஒத்தனவாக விளங்குகின்றன. எனினும் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்துலக மன்னிப்புக் கழகத்திற்குக் கவலை தருவனவாக விளங்குகின்றன. காரணம் எல்லா மக்களினதும் அல்லது சிலரின் மரபு வழியான உரிமைகளையும் சுதந்திரத்தையும்

ஓரளவு கட்டுப்படுத்துவதாக அரசுகளின் நடவடிக்கைகள் அமைந்திருந்ததுதான். பெரிய பிரித்தானியா, வட அயர்லாந்துக் குடியரசு, சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு, இத்தாலி ஆகிய நாடுகளில் பயங்கரவாதிகளுக்கெதிராகக் கொண்டுவந்த சட்டமும் இவ்வறிக்கை வரையப்படுகையில் இஸ்பெயின் அரசினுல் கொண்டுவரப்பட வேண்டுமா என ஆராயப்படும் சட்டமும் மேற்குறித்த தன்மையை ஒத்தனவாக விளங்குகின்றன. எனினும் அனைத்துலக மன்னிப்புக் கழகத்தைப் பொறுத்த வரை மேற்குறித்த எந்த நாடுகளிலும் பிழையாக குற்றம்சாட்டப்பட்டு சிறையிலிடப்பட்டதற்கு இதுவரை சான்றில்லை. எனினும் தனி விடயங்களையொட்டி அரசின் நிறைவேற்றுத் துறையினதும் காவற்றுறையினதும் அதிகாரத்தை அதிகரிக்கும் இத்தகைய சட்டங்கள் மனித உரிமைகள் மீறப்படுத்துவதற்கு மேலும் துணைநிற்பதோடு அரசின் நல்லெண்ணத்திலேயே மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டிய நிலையை ஏற்படுத்துகிறது. அத்துடன் தனது அதிகாரங்களை ஆராயாது கடுமையாக பயன்படுத்துகையில் மக்களின் எதிர்ப்பைத் தாங்க முடியாது விட்டுக்கொடுக்கும் நிலையையும் உருவாக்குகிறது.

பயங்கரவாத நடவடிக்கைகளை எப்படித்தடுப்பது என நாடுகளில் சிந்தனையோடு நாட்டின் பாதுகாப்பு அல்லது மக்களின் பாதுகாப்பு என்ற பெயரில் மனித உரிமைகளை எல்லையளவு கட்டுப்படுத்தும் சட்டங்களோடு பயங்கரவாத நடவடிக்கையும் ஒன்றிணைக்கப்படின் மனித உரிமைகள் மீறப்படும் நிகழ்ச்சிகள் நிகழக்கூடும். 1978 முதற் பகுதியில் பேச்சு சுதந்திரத்தின் சட்ட எல்லை என்பதுபற்றி சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசில் நிகழ்ந்த இரு விசாரணைகளைப் பார்வையிடப் பார்வையாளர்களை அனைத்துலக மன்னிப்புக் கழகம் அனுப்பியது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் பொறுத்தவரையில் தடுக்கும் சட்டம் இருந்தாலும், பயங்கரவாத நடடிக்கைகளையொட்டி மிக ஆழ்ந்த கவலை தேசிய அடிப்படையில் திகழ்ந்தாலும் பயங்கரவாதிகளின் அனுதாபி என்று கருதப்பட்ட மக்களின் செயல்களும் குற்றவியல் வழக்குத் தொடரும் சூழ்நிலையை உருவாக்கியது. ஒரு நாட்டின் சில மக்களின் மனித உரிமைகளை பயங்கரவாத பிரச்சாரமும் செயல்களும் பாதிக்கின்றதெனினும் தனிமனித உரிமைகளைப் பாதிக்கின்ற அளவிற்கு அரசியல் வன்முறையை எதிர்க்கவேண்டும் என்ற கோட்பாட்டினை அனைத்துலக மன்னிப்பு கழகம் ஏற்க மறுக்கின்றது.

பயங்கரவாதத்திற்கு எதிராக நடத்திய போராட்டம் சிறைக்கைதிகளைத் துன்புறுத்தும் அளவிற்கு மேற்கத்திய ஐரோப்பாவில் ஒரு நிலையை உருவாக்கி இருப்பது அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. அனைத்துலக மன்னிப்புக் கழகம் அயர்லாந்து குடியரசிற்கும் (யூன் 1977) வட அயர்லாந்திற்கும் (1977 திசெம்பர்) ஆய்வுக் குழுக்களை அனுப்பியது இவ் இரண்டு தூதுக் குழுக்களை அனுப்பி அவற்றின் ஆய்வின் அடிப்படையில் அனைத்துலக மன்னிப்புக் கழகம் தனது கண்டுபிடிப்புக்களைப் பற்றியும் விதந்துரைப்புக்களைப் பற்றியும் அறிக்கை வெளியிடப்பட்டது.

சேர்மன் இணைப்பாட்சிக் குடிவரசில் சிறைக் கைதிகளைத் துன்புறுத்தும் நிலை வேறொரு நிலையில் அமைந்திருந்தது. அரசியல் கைதிகள் அல்லது அரசியல் உந்துதலால் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டோரை பிற கைதிகளிடமிருந்து பிரித்தும், தனிச் சிறைகளில் அடைக்கப்பட்டும், தம் உணர்வுகளை வெளிக்காட்ட முடியாமல் தடுக்கப்பட்டும் வைக்கப்பட்டிருந்தனர். இச் செய்கைகளுக்காக அதிகாரிகள் மீது குற்றம் காண்கையில் இக் கைதிகள் சிறையில் அடைக்கப்படாவிடில் அவர்கள் தொடர்ந்தும் வன்முறையில் ஈடுபடுவதைத் தாங்கவேண்டி நேரிடும் என்று விடை பகிர்கின்றனர். கடந்த ஆண்டு முழுவதும் சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு அதிகாரிகளின் சிறைக் கைதிகளை நடாத்தும் முறைபற்றித் தாம் கவனித்து வருவதாக அனைத்துலக மன்னிப்புக் கழகம் அவர்களை உணரச் செய்தது. 1977 இறுதிப் பகுதியில் தம் அமைப்பின் ஈடுபாட்டை விளக்குவதற்கும் சிறையிலிடப்பட்ட செம்படைக்கூறின் உறுப்பினர்களும் இரண்டாவது யூன் இயக்க உறுப்பினர்களும் எப்படி நடத்தப்படுகின்றனர் என்று ஆராய்வதற்கும் ஒரு ஆய்வுக்குழுவை அமைத்தது.

அரசுகளால் மனித உரிமைகள் மீறப்படுவதை எடுத்துக் காட்டும் முறையிலேயே அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் ஆய்வும் நடவடிக்கைகளும முதலில் அமைந்திருந்தன. ஆனல் சென்ற ஆண்டிற் பயங்கரவாதிகளால் சிறைக் கைதிகளாக கொண்டு செல்லப்பட்டவர்கள் சாகடிக்கப்பட்டதையும் துன்புறுத்தப்பட்டதையும் தன் கூடிய கவனத்திற்கு எடுக்கத் தொடங்கியது. 1978 மேயில் முன்னைய இத்தாலிய முதலமைச்சர் அல்டோ மோரோவை விடுவிக்குமாறு அனைத்துலக மன்னிப்புக்கழகம் வேண்டுகோளை விடுவித்தது. ஆனல் இவரோ செம்படை உறுப்பினர்களால் கடத்திச் செல்லப்பட்டு ஏறக்குறைய 8 கிழமைகளுக்கிடையில் சாகடிக்கப்பட்டார். 1978 யூனில் வட அயர்லாந்திலுள்ள தற்காலிக அயர்லாந்துப்படை வீரர்களால் ஒளித்திருந்தபோது பிடிக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட "நகர காவலர்" வில்லியம் ரெர்பிட்டையும் அதற்கு எதிர் நடவடிக்கையாக புரட்டஸ்தாந்து பயங்கரவாதக் குழுவினல் கடத்திச் செல்லப்பட்ட கத்தோலிக்க குருவான அருட் திரு கியூச் மேர்சியையும் விடுவிக்குமாறு அனைத்துலக மன்னிப்புக் கழகம் வேண்டுக்கோள் விடுத்தது. வணக்கத்திற்குரிய அருட்திரு மேர்சி அவர்கள் பின்பு விடுவிக்கப்பட்டார். ஆனல் நகர காவலர் ரேர்பிட்டைப் பொறுத்தவரையில் அவர் குறுக்கு விசாரணைக்கு ஆளாக்கப்படுவார் என அவரைக் கடத்திச் சென்றோர் அச்சுறுத்திய பொழுதும் அவர் அவர்கள் வசம் இருக்கையிலேயே உயிர் துறந்தார்.

பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கைதிகள் நடாத்தப்படும் முறை பற்றி அனைத்துலக மன்னிப்புக் கழகம் கவலையுறுகிறது. குறிப்பாக சோ.ச.கு. ஒன்றியத்தில் இருக்கும் கைதிகள் துன்புறுத்தப்படுவது நல்ல முறையில் ஆவணமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அனைத்துலக மன்


னிப்புக் கழகம் ஐ. சோ. ச. கு. ஒன்றிய அதிகாரிகள் தம் கருத்தோடு மாறுபடுவோரை மனநோயாளர் மருத்துவ விடுதியில் வைத்திருப்பதையும் பலரைத் துன்புறுத்த மருந்துகளைப் பயன்படுத்துவதையும் உலகிற்கு எடுத்துக்காட்டியதோடு தன் எதிர்ப்புக்களையும் தெரிவித்துள்ளது.

அனைத்துலக மன்னிப்புக் கழகம் உறுமேனியாவிலும் அரசுடன் மாறுபடுவோரை அரசியற் காரணங்களுக்காக மருத்துவ விடுதியில் வைத்திருப்பதையும் மனநோய் மருத்துவ வழிமுறைகளால் துன்புறுத்தப்பட்டது பற்றிய அனைத்துலக மன்னிப்புக் கழகம் பெற்ற தகவல் இதனை உறுதிப்படுத்தியது. தடுப்புக் காவலில் வைத்திருக்கப்பட்ட எதிர்க் கருத்துடையோர் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்பதனை உறுமேனியாவிலும், போலந்திலும் கிடைத்த செய்திகள் உறுதிப்படுத்தின. இத்தகவல்களை அனைத்துலக மன்னிப்புக் கழகம் ஆவணங்களாக வெளியிட்டது.

1978 பெப்புருவரியில் நுடல்ங்கெஸ் இன் சிறை நிலைமை பற்றி அனைத்துலக மன்னிப்புக் கழகம் நடவடிக்கை எடுத்தது. (நுடல்ங்கெஸ் என்பவர் முன்னைய நாசிக் கட்சித் தலைவர்களுள் ஒருவராவர். இவர் வாழ்நாள் சிறையில் இருக்கிறார். பேர்லினிலுள்ள ஸ்பண்டாயோ சிறையில் தனிக்கைதியாக இருக்கும் இவர் காலவரையறை இன்றி தனித்து சிறையில் வாழவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்) பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம் ஐக்கிய அமெரிக்கா, சோ.ச.கு.ஒ. ஆகிய நாடுகளின் அரசாங்கங்களிடம் தடுப்புக் காவலிலுள்ள றுடல்செய்வின் நிலைமையை மாற்றும்படி அனைத்துலக மன்னிப்புக் கழகம் வேண்டியது. செஸ்ஸின் சிறை வாழ்வை முடிக்கும்படி தாம் தொடர்ச்சியாக வேண்டுகோள்விடுத்ததாக முதல் மூன்று அரசுகளும் மறுமொழி அனுப்பியுள்ளன. செஸ் அவர்களை மனசாட்சிக் கைதியாக அனைத்துலக மன்னிப்புக் கழகம் கருதவில்லை., ஆனால் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் இவர் நிலையை மனிதாபிமானமற்ற கீழ்த்தரமான கொடூரமான முறை எனக் கருதுகின்றது.

பிரான்ஸ், சோ. ச. கு. ஒ, செக்கோசிலவாக்கியா. யூகோஸ்லேவாக்கியா, போலந்து, உருமேனியா, கங்கேரி, பல்கேரியா, சைப்பிரஸ் ஆகிய நாடுகள் கடந்த ஆண்டில் தூக்குத் தண்டனையை விதித்துள்ளன என அறியப்படுகின்றது யூகோஸ்லேவாக்கியாவிலும், அல்பேனியாவிலும் கொண்டுவரப்பட்ட புதிய பீனல் சட்டம் இந்நாடுகளில் தூக்குத் தண்டனையை நீக்குவதற்கான எதுவித அறிகுறியையும் காட்டவில்லை. 1978 இல் கிரேக்கத்தில் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதிகளுக்கு எதிராகச் சட்டம் இக்குற்றங்களின் எண்ணிக்கையை கூட்டியதோடு இவர்களுக்கு தூக்குத்தண்டனையை முற்றாக அளிக்கும் சட்டத்தை நிறைவேற்றியது. இதுகாலவரையில் போராட்டச் சூழ்நிலை

யில் அரசுக்கு எதிராகச் செய்யப்பட்ட கடுமையான குற்றங்களுக்கெதிராக இத்தண்டனை விதிக்கப்பட்டது. 1978 இல் இளவேனில் தூக்குத் தண்டனையை முற்றாக ஒழிக்கும் சட்டத்தைப் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும் என நோர்வே அரசு அறிவித்தது, இன்னும் ஒரு மகிழ்ச்சி தரும் போக்கும் உருவாக்கியது. இதன்படி 1978 யூனில் கொப்பன் கேக்னில் நடைபெற்ற ஐரோப்பிய நீதி அமைச்சின் XIவது மகாநாட்டில் ஐரோப்பிய அவையின் அமைச்சர் குழுவினால் இவ்வமைப்பின் உரிய குழுக்களுக்கு தூக்குத் தண்டனை பற்றி எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய விடும்படி ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் ஐரோப்பிய நீதி அமைச்சர்களின் XII வது மாநாட்டின் இவ்விடயங்களை மேலும் ஆராய்தல் வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டது.



சோவியத் சமவுடமைக் குடியரசுகளின் ஒன்றியத்தில் உளநோயாளர் என்ற பெயரில் பல தவறுகள் செய்யப்படுகின்றன. உண்மையான மருத்துவக் காரணங்களுக்கு மாறாக மாறுபட்ட அரசியல் அல்லது சமயக் கொள்கைகள் கொண்டிருப்பதற்காக உளநோய் மருத்துவ விடுதியில் மறக்கப்பட்ட கைதிகள் என அனைத்துலக மன்னிப்புக் கழகத்தினால் வர்ணிக்கப்பட்டோர் இவ்விடுதியில் தங்கவிடப்பட்டிருக்கின்றனர். மிக இரகசியமான சூழ்நிலையில் நீண்ட காலத்திற்கு இவர்கள் இங்கு தங்கவிடப்பட்டிருக்கின்றனர். அவர்களின் பழைய வரலாற்றைப் பெறுவதில் உள்ள சிக்கலும், அவர்களைப் பற்றிய தகவலைப் பெறுவதில் உள்ள இடர்ப்பாடும் மக்கள் அவர்களைப் பற்றித் தெரியாத நிலையை உருவாக்கி இருக்கிறது. இதன் காரணமாக மிகப் பெரிய துன்புறுத்தலுக்கும், ஆளாகி உள்ளார்கள் என ஊகிக்கவேண்டியிருக்கிறது.

படம்: உருசிய தேவாலயத்திற்கு மதிப்பளிக்கும் உதவி.

## மத்திய கிழக்கும் வட ஆபிரிக்காவும்

1977-1978 இல் மத்திய கிழக்குநாடுகளில் அடிப்படைச்சட்டப் பாதுகாப்புக்களின் போதாமை குறிப்பாக தடுப்புக்காவல், விசாரணை நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் கவனத்தை அதிகளவில் ஈர்த்தது. இப்பகுதிகளில் அரசியல் கைதிகள் பலர் விசாரணையின்றி வைக்கப்பட்டிருந்தனர். ஈராக்கில் குர்டிஸ் ஆயுதப்படைகளின் தொடர்ச்சியான சதிமுயற்சியைத் தொடர்ந்து கைது செய்யப்படுதலிருந்து தப்பித்துக்கொண்ட குற்றஞ்சாட்டப்பட்ட குர்டிஸ் சதிகாரர்களின் இனத்தவர்களான ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் ஆகிய நூற்றுக் கணக்கான கைதிகள் கைது செய்தும், தடுத்தும் வைக்கப்பட்டார்கள். தடுத்து வைக்கப்பட்டவர்களும், அனைத்துலக மன்னிப்புக் குழுக்களின் நடவடிக்கைகளுமே செய்தி வெளியீடொன்றில் குறிப்பிடப்பட்ட விடயமாக இருந்தன. மொரோக்கோவில் விசாரணையின்றி இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்புகொள்ள முடியாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பற்றிய பிரச்சினை 1977 ஒற்ரோபரில் வெளியிடப்பட்ட சுருக்கமான செய்தியிதழில் வலியுறுத்தப்பட்டது. தனிப்பட்ட கைதிகள் பற்றிய தகவல்கள் பெறுவதில் இடர்பாடுடைய யேமன் இணைப்பாட்சிக் குடியரசில் வதிவோரில் பெரும்பாலோரை உள்ளடக்கிய அரசியற் கைதிகளுக்காகவும், விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்போருக்காகவும் தடுப்புக்காவல் நிலையமொன்றை அனைத்துலக மன்னிப்புக் கழகம் ஏற்படுத்தியது.

விசாரணையின்றித் தடுத்து வைத்தல் பற்றிய விடயத்தை சிரியா, யோடான் ஆகிய நாடுகளின் அரசுகளுடன் உயர்மட்டத் தூதுக்குழுவொன்று 1978 மார்ச்சில் ஆராய்ந்தது. சிரியாவில் பெரும்பாலும் எல்லா அரசியல் கைதிகளும் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அனைத்துலக மன்னிப்புக் கழகம் 86 பேரின் சார்பில் பணிபுரிகிறது. இவர்களுள் ஒருவர் 21 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். அத்துடன் இஸ்ரேலிலும் கைப்பற்றப்பட்ட எல்லைகளிலும் நிருவாகரீதியில் தடுத்து வைக்கப்பட்டமைபற்றிய விடயமே இஸ்ரேல் அரசு நிறுவப்பட்டதினதும், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தினதும் 30 வது ஆண்டை நினைவு கூரும் முகமாக 1978 மேயில் குழுமட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரமாகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் அரசியல் கைதிகள் விசாரணைக்காக கொண்டுவரப்படுகையில் அநேகமாக இராணுவத்தினால் அல்லது சிறப்பு நீதிமன்றங்களால் விசாரிக்கப்படுவதுடன் விசாரணைகளும் மறைவாகவே இடம்பெற்றன. எடுத்துக்காட்டாக ஈராக்கில் பெரும்பாலும் எல்லா அரசியல் கைதிகளும் சிறப்பு நீதிமன்றங்களில் இரகசியமாக விசாரிக்கப்படுவதுடன் இத்தகைய விசாரணைகள் பற்றிய முன்னறிவித்தல் மிக அருமையாகப் பகிரங்கப்படுத்தப்படுவதால் அரசியல் விசாரணையொன்றை அவதானிப்பது அனைத்துலக மன்னிப்புக் கழகத்திற்குக் இடர்ப்பாடாக உள்ளது. ஈரானிலும் அரசியல் கைதிகள்

எப்போதும் இராணுவ நீதி மன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதுடன், 1977 நவெம்பரில் கொண்டுவரப்பட்ட இராணுவச் சட்டத்துக்கான திருத்தங்கள் உள்ள நிலையிலும் நியாயமான விசாரணையை மேற்கொள்ளாமையால் இராணுவ விசாரணை நடவடிக்கைகள் கடுமையான கண்டனத்துக்குள்ளாகின. எனினும், 1978 மார்ச்சில் அரசியல் கைதிகள் குடியுரிமை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அனைத்துலக மன்னிப்புக் கழகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

1978 மார்ச்சிலும், ஏப்பிரலிலும் அனைத்துலக மன்னிப்புக் கழகம் எகிப்தில் அரச பாதுகாப்பு நீதிமன்றத்திலும், இராணுவ நீதிமன்றத்திலும் மூன்று வேறுபட்ட விசாரணைகளில் கலந்துகொள்ள இரு பார்வையாளர்களை அனுப்பியிருந்தது. கடந்த ஆண்டில் எகிப்தில் ஏற்பட்ட போக்கு கவலைக்குரிய விடயமாகும். சில குடுப்பிட்ட அரசியல்கைதிகளை இராணுவ நீதி மன்றங்களுக்கும் அரசியல் காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டு முன்னர் விடுவிக்கப்பட்டவர்களைக் (1976 இல் நீதிமன்றத் தீர்ப்பினால்) குழுவொன்று மீள் விசாரணைக்காகவும் அனுப்புவதன் மூலம் அவசரகாலச் சட்ட நிலைமைகளின் கீழ் நீதித்துறையில் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை தலைவர் சதாத் தொடர்ந்தும் கையாண்டார். சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசின் (சே. இ. கு.) இரு குடிமக்களிலும் நைரோப்பியாவில் ஈ 1 ஏ 1 என்ற வான்கலமொன்றைச் சுடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பாக 1976 சனவரி தொடக்கம் இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்ட மூன்று பஸ்தீனியர்களினதும் இராணுவ விசாரணைகளுக்கு 1978 சனவரியில் பார்வையாளரொருவரை அனுப்ப அனைத்துலக மன்னிப்புக் கழகம் மறுத்துவிட்டது. சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசுத் தூதரகத்தினதும் செஞ்சிலுவைச் சங்க பன்னாட்டு குழுவினதும் பிரதிநிதிகள் விசாரணையை அவதானிப்பதற்கு அனுமதிக்கப்படார்களென பின்பு அனைத்துலக மன்னிப்புக் கழகத்துக்கு அறிவிக்கப்பட்டது.[1]



**பகதீன் முகமது!**

மக்கள் குடியாட்சி யேமன் குடியரசு

எந்த விதத்திலும் கண்டுபிடிக்க முடியாத வகையில் மறைந்தவர்களுள் பகதீன் அகமத் முகமது என்பவர் ஒருவராவார். 197 இல் தனது சகோதரியின் வீட்டில் ஒரு ஜீப்பிற்குள் இவர் தள்ளப்பட்டதே இறுதியாகக் கண்ட காட்சியாக விளங்குகிறது. சட்டப்படி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மக்களின் உறவினர்களுக்கு வழங்கப்படும் வழமையான தொகையே பகதீன் குடும்பத்திற்கு இழப்பீடாக அரசு வழங்கி உள்ளது. ஆனால், இவர் எங்கே என்பது பற்றித்தனக்கெதுவும் தெரியாதென அரசு கூறுகிறது.

---

1. ருனீசியாவில் அனைத்துலக மன்னிப்புக் கழகப் பார்வையாளர் 30 தொழிற்சங்க உறுப்பினர்களின் விசாரணையைப் பார்வையிடும் உரிமை மறுக்கப்பட்டது.

சித்திரவதை செய்யப்படுவதைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டில் இரு சாதகமான போக்குகள் காணப்பட்டன. ஈரானில் சித்திரவதை செய்யப்படுதல் குறைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டதுடன், இஸ்ரேலிய அரசு தடுத்துவைக்கப்பட்டோரை கைதுசெய்யப்பட்டு 14 நாட்களுக்குள் அவர்களது விசாரணை நடந்துகொண்டிருக்கும் போதும் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்துலகக் குழு பார்வையிடுவதை அனுமதித்தது. முன்பு விசாரணை முடிந்தபின்பே ஐயுறவுக்குரியவர்களைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டது. எனினும் சித்திரவதை பற்றிய குற்றச்சாட்டுக்கள் இவ்விருநாடுகளிலிருந்தும் சிரியா, எகிப்து, ரியூனிசியா. யோடான், மொறக்கொ, ஈராக் ஆகிய நாடுகளிலிருந்தும் கிடைக்கப்பெற்றன. பல ஆண்டுகளில் முதல் முறையாக லெபனானின் சித்திரவதை பற்றிய விபரமான நம்பகமான அறிக்கையொன்றைப் பெற்றதுடன், முன்பு தடுத்து வைக்கப்பட்டு சிரியாவில் சித்திரவதை செய்யப்பட்ட ஒருவரின் மருத்துவ அறிக்கையும் சிரிய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. சிறைச்சாலைகளின் வசதியற்ற நிலைமைகளும், ஒழுக்கமும் பற்றிய அறிக்கைகள் யோடான், மொறக்கோ, ஈரான், இஸ்ரேல், ரியூனிசியா ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. சிறைச்சாலை நிலைமைகளுக்கெதிராக ஈரான், மொறுக்கோ நாடுகளில் கைதிகள் எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக உண்ணாவிரதங்களை மேற்கொண்டிருக்கின்றனர். இஸ்ரேலில் சிறையிலுள்ள நிலைமைகளின் காரணமாகப் பாதிக்கப்பட்ட கைதியொருவரின் உடல் நிலையே பன்னாட்டு மன்னிப்புக் கழகத்தின் அவசர நடவடிக்கை இயக்கத்தின் காரணமாகும். இவர் பின்பு விடுதலை செய்யப்பட்டார்.

ஈராக்கில், அறிவிக்கப்பட்ட தூக்குத்தண்டனைகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. தூக்குத்தண்டனைகள் வழக்கமாக இரகசியமாக நிறைவேற்றப்படுவதால் அவற்றின் சரியான எண்ணிக்கையை அறிய முடியாமலிருக்கிறது. ஆயின் 1977 சனவரியிலிருந்து தூக்கிலிடப்பட்ட 200 க்கும் மேற்பட்ட ஈராக் மக்களின் பெயர்கள் சேகரிக்கப்பட்டு ஈராக் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவர்களில் அநேகமானோர் கேட் இனத்தவராயிருப்பதுடன் குர்டிஷ் புரட்சியில் அரசியல் அல்லது இராணுவ ஈடுபாடுகளுக்காகத் தூக்கிலிடப்பட்டவர்களாகும். மறுபக்கத்தில் ஈரானில் அரசியல் காரணங்களுக்காக அரசினுல் விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனைகளில் எண்ணிக்கை குறைவுற்றதாகக் காணப்படுகிறது. கடந்த ஆண்டில் உளவறிதலுக்காகவும் அரசியல் கொலைகளுக்காகவுமான இரண்டு தூக்குத் தண்டனைகள் அறிவிக்கப்பட்டன. தூக்குத் தண்டனைகள் எகிப்தில் சதிக்காகவும், சிரியாவில் கொலைக்காகவும், சவுதி அரேபியாவில் கொலை, கடத்தல், கற்பழிப்பு, பிறர்மனைநாடல் ஆகியவற்றிற்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. அல்ஜீரியாவில் மேயில் கொலைமுயற்சி வழக்கொன்றில் மரணதண்டனை வழங்கப்பட்டபோது மனிதாபிமான அடிப்படையில் தண்டனை குறைக்கப்படவேண்டுமென

அனைத்துலக மன்னிப்புக் கழகம் வேண்டுகோள் விடுத்தது. இஸ்ரேலில் சதி முயற்சி வழக்கில் வழங்கப்பட்ட மரண தண்டனை குறைக்கப்பட்டது. இஸ்ரேலினல் கைப்பற்றப்பட்ட நிலத்தை விற்றமைக்காக விற்றவர் இல்லாத நிலையிலும் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இதை எழுதும்போது பொறேக்கோ, ரியூனிசியா, அல்ஜீரியா நாடுகளையும் அத்துடன் பொறிரானியா, மேற்கு சகாரா மாநிலத்தையும் உள்ளடக்கிய மத்திய கிழக்கிலுள்ள 852 சிறைக் கைதிகளின் சார்பில் அனைத்துலக மன்னிப்புக்கழகக் குழுக்கள் பணி புரிகின்றன. அனைத்துலக செயலத்தின் ஆய்வுத் திணைக்களத்தின் மத்திய கிழக்குப் பிரிவின் பொறுப்பாக மேற்குறித்த நாடுகள் இவ்வாண்டு தொடங்கி ஆய்வுக் குட்படுத்தப்பட்டுள்ளன.

சிரியா, இஸ்ரேல், ஈரான், எகிப்து, ரியூனிசியா, மொறுக்கோ, யோடான் (முதல் முறையாக) ஆகிய நாடுகளில் புதிய வழக்குகள் எடுக்கப்பட்ட வேளையில் யேமன் இணைப்பாட்சிக் குடியரசில் மத்திய கிழக்கின் முழுச்சிறைச்சாலையினதும் கையேற்றல்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பாரெயின், ஈராக், லிபியா போன்ற குறிப்பிட்ட சில நாடுகள் கையேற்ற திட்டத்தைப் பொறுத்தவரையில் தம் கொள்கையில் பெருமளவில் எதுவித மாற்றத்துக்கும் உள்ளாகவில்லை. எனினும் கையேற்றல்பற்றி ஏனைய முழு மட்டத்திலும் தாதுவர்கள் மட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சவுதி அரேபியா, யேமன், அரபுக் குடியரசு, அரபுக் குடா நாடுகள் (பாரெயின் தவிர) ஆகியவற்றில் ஒவ்வொரு கைதியையும் பற்றிய சிறு தகவல்களை அனைத்துலக மன்னிப்புக் கழகம் இன்னும் வைத்திருக்கிறது.

நூறுக்கும் மேற்பட்ட சகாராக் குடிமக்கள் கசாராவின் தலைநகரான அல் அயுன் பிராந்தியத்தில் மொறுக்கோ நாட்டுப் படைகளால் கைது செய்யப்பட்டும், தடுத்து வைக்கப்பட்டும் இருப்பதாக அனைத்துலக மன்னிப்புக் கழகத்துக்கு அறிக்கைகள் கிடைத்திருப்பதுடன் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் நிலைமைபற்றி ஆராய இக் கழகம் முயற்சிகளை மேற்கொள்கிறது. அத்துடன் அவர்கள் சிரிய அதிகாரிகளால் எடுத்துச்செல்லப்பட்டதுடன் ஏனைய பல நூறு பேர்களுக்கிடையில் சிரிய பாதுகாப்புப் படைகளினல் கடத்திச் செல்லப்பட்டு சிரியாவில் சிறை வைக்கப்பட்டனர். ஓமானில் பாரெயினிலிருந்து அனுப்பப்பட்டபின் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற முராட் அப்துல் வகாப் என்ற ஒரேயொரு கையேற்கப்பட்ட கைதியை அனைத்துலக மன்னிப்புக் கழகம் இன்னும் வைத்திருக்கிறது. ஓமானின் ஏனைய அரசியல் கைதிகளைப்பற்றியும் அனைத்துலக மன்னிப்புக் கழகம் அறிந்துள்ள போதிலும் அவர்கள் மனச்சாட்சிக் கைதிகளாக இல்லையா என்று நிறுவுவதற்குப் போதிய தகவல்கள் இல்லை. அல்ஜீரியாவில் 1965 ஆம் ஆண்டிலிருந்து வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள அகமது பென் பெல்லா என்ற கைதி பற்றி மட்டுமே அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் வேலை தொடர்கிறது. 1978 மேயில் ஒரு சிறப்பு முறையீட்டு இயக்கத்தின் பொருளாக இவர் இருந்தார்.

இப் பிராந்தியத்திலுள்ள இரு நாடுகள் பற்றி இரு அனைத்துலக மன்னிப்புக் கழக வெளியீகள் 1977-78 இல் வெளியிடப்பட்டுள்ளன. 1977 ஒற்றோபரில் மொறக்கோ பற்றிய சுருக்கமான செய்தியித ழொன்று வெளியிடப்பட்டது. அத்துடன், ஈரானின் இராணுவ விசாரணை நடவடிக்கைகள் பற்றி அனைத்துலக அமைப்புக்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் துணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பும் 1978 பெப்புருவரியில் வெளியிடப்பட்டது.

மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் முக்கியமாக அலுவலர் பற்றுக் குறை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு மிகக் குறைந்த உயர் மட்ட தூதுக்குழுக்களே அனுப்பப்பட்டன. யோடானுக்கும் சிரியா வுக்கும் 1978 மார்ச்சில் பேராளர்கள் (இது யோடானுக்குச் சென்ற அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் முதல் உயர்மட்டக் குழுவாகும்)[1] சென்றனர். மொறக்கோவின் சுருக்கச் செய்யிதழ் வெளியீட்டின் பின்னர் 1978 சனவரியில் ஒரு பகிரங்க அறிக்கையில் அனைத்துலக மன் னிப்புக் கழகம் இந்நாட்டுக்குப் பேராளர்களை அனுப்பவேண்டுமென மொறக்கோ அரசு ஆலோசனை தெரிவித்ததுடன் இவ்வழைப்பு பின்பு தொடரப்படுகின்றது. ஈரானுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பும்படி யான அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் வேண்டுகோள் 1977 யூனில் ஈராக் அதிகாரிகளினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

## மரண தண்டனைத் திட்டம்


1977 திசெம்பரில் ஸ்ரொக்கொம் நகரில் மரண தண்டனை ஒழிப்பை உலக அளவில் பரந்ததாக மேற்கொள்வதற்காக தொடக்கவேலையைக் குறிக்கும் முகமாக அனைத்துலக மன்னிப்புக் கழகத்தினால் அனைத்துலக மாநாடொன்று கூட்டப்பட்டது. 1978 இல் இம் மாநாடு பற்றிய அறிக்கையொன்றும் வழங்கப்பட்டதுடன் தொடர்ந்து மரண தண் டனை பற்றிய விபரமான அறிக்கையொன்று 1979இல் வெளியிடப்படும்.

பண்பாட்டுச் சிறப்புக்கள் மரபுகள் ஆகிய வேறுபாடுகள் உலக அளவில் மரண தண்டனை எதிர்ப்பிற்கு தடை என்ற கருத்திற்கு ஸ்ரொக்கொம் மாநாடு ஒரு அறைகூவலாக அமைந்துள்ளது. எல்லா மாக 50 நாடுகளிலிருந்து பேராளர்கள் இதில் இடம் பெற்றிருந்தனர்.

மாநாட்டின் இறுதியில் அனைத்து அமர்வும் 1978 மார்ச்சில் அனைத் துலக மன்னிப்புக்கழகத்தின் அனைத்துலக நிறைவேற்றுக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸ்ரொக்கொம் பிரகடனத்தைக் ஏற்றுக் கொண்டது.

---

1. 1978 நவெம்பரில அனைத்துலக மன்னிப்புக்கழகத் தூதுக்குழு ஈரானுக்கு வருகை தந்து திட்டமிட்டு நடாத்தப்படும் சித்திரவதை பற்றி ஆவணங்களுடன் அமைந்த குறிப்புக்களைப் பெற்றது.



இலங்கை மன்றக் கல்லூரியின் மனித உரிமைகள் நிலேடத்திறைல் ஒழுங்கு செய்யப்பட்ட ஓவியக் காட்சியில் வைக்கப்பட்ட படங்களில் ஒன்று (நன்றி நவிலல் பகுதியில் பார்க்க வும்) படிக்காரமாடுவிலயிலுள்ள படிக்கராமாடுவவிவ்ய மகா வித்தியாலயத்தில் பயிலும் ரூப ஜெயசிங்காவினல் தீட்டப்பட்டு பெரிதும் விதந்துரைத்த படம் இது.

மரண தண்டனை மீதான அனைத்துலக மன்னிப்புக் கழக அறிக்கை மரண தண்டனை நீக்கப்படவேண்டுமா, வைத்திருக்கப்பட வேண்டுமா? என்பதுபற்றிய சொற்போரில் பெறப்பட்ட முக்கியமான விடயங்களில் தனது கவனத்தை ஈர்த்தன. இவ்வறிக்கை 1973–77 காலப்பகுதியில் இது எந்த அளவில் பயன்படுத்தப்பட்டது என்பதுபற்றிய விபரங்களை யும் தருகின்றது. இவ்விடயம் பற்றிய தேசிய, அனைத்துலக சட்டங் கள் பற்றிய விபரங்களையும் தருகின்றது. இது சட்டமுறைப்படி தீர் மானிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்ட அடிப்படையிலான மரண தண்டனையையும் அரசினால் அல்லது அரசின் ஆதரவுடன் செய்யப்பட்ட கொலைகள் அதாவது நீதிமன்றத்தின் தீர்ப்பின்றி நிறைவேற்றப்பட்ட மரண தண்டனையையும் குறிப்பிடுகிறது.

இவ்வறிக்கை பற்றிய ஆய்வானது தவிர்க்க முடியாத இடர்ப்பாடு களை எதிர்நோக்கியது. அனைத்துலக அமைப்புக்களுக்கு ஐக்கிய நாடு கள் போன்று அரசுகள் வழங்கும் உத்தியோக பூர்வமான தகவல் எப்போதும் உண்மையானதாகவும் அனைத்தையும் உள்ளடக்கியதாயு மிருக்கவில்லை மன்னிப்புக் கழகத்தின் அனைத்துலக செயலகம் லண்ட னிலுள்ள தூதரகங்களுக்கு அரசுகள் தமது சொந்த சட்டப்படி மரண தண்டனைகள் பற்றிய சட்டம், நடைமுறை ஆகிய தகவல்களை வழங்க வேண்டுமெனக் கேட்டு எழுதியபோது எல்லா அரசுகளும் விடையளிக்க வில்லை விடையளித்தோரில் சிலர் சட்ட ஏற்பாடுகளைப்பற்றி வலி யுறுத்தினர். ஏனையோர் தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்துவது பற்றியும் அல்லது மன்னிப்பளிப்பது பற்றியும் எடுத்துரைத்தனர். மற்றும் ஏனையோர் ஒவ்வொரு நாட்டின் சூழ்நிலைக் கேற்பவே தூக்குத் தண்டனைப்பற்றி ஆராயவேண்டுமென எடுத்து விளக்கினர். சுருக்க மாகக் கூறின் அனைத்துலக மன்னிப்புக் கழகத்துக்குக் கிடைத்த தகவல் நிறையுடையதாயுமிருக்கவில்லை. வலியுறுத்தும் தன்மையில் கூட ஓர் நிலையான போக்கு இருக்கவில்லை. இத்தகைய குறைபாடுகள் இருந்த போதும் தூக்குத் தண்டனைபற்றி எழுந்துள்ள சொற்போருக்குக் கணிச மான பங்களிப்பாக இவை அமையுமென்பது எமது நம்பிக்கையாகும்.

தூக்குத் தண்டனைக்கெதிராக முறையாக நடாத்தப்பட்ட பணி யாக அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் 1977 இல் நடைபெற்ற ஸ்ரொக்கொம் மாநாடு அமைந்திருந்தது. கொள்கைப் பகுப்பாய் வாகவும், சொற்போராவுகம், கொள்கை விளக்கமாகவும் விதந்துரைப் புக்களாக விளங்கியவற்றை அனைத்தையுமுள்ளடக்கிய வலுவுள்ள செயற்றிட்டமாக மாற்றுவதில் நெடுநாட்கள் சென்றுள்ளதென்பது உண்மையே. காரணம் தூக்குத் தண்டனையை முற்றாக ஒழிக்கவேண்டும் எனப் பரந்த அடிப்படையில் இயங்கும் அனைத்துலக மன்னிப்புக் கழகத் துக்கு தூக்குத் தண்டனை பல சிக்கலான விடயங்களை எழுப்பத்தான் செய்கிறது என்பது ஏற்கத்தக்க உண்மையாகும்.

## அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் சில புள்ளிவிபரங்கள்

1977 யூலை 1 ஆம் திகதி தொடங்கி 1978 யூன் 30 ஆம் திகதிவரை யுள்ள காலப்பிரிவில்:-

1. இவ்வமைப்பு 27 நாடுகளுக்கு தூதுக்குழுக்களையும், விசாரணைப் பார்வையாளர்களையும் அனுப்பியது.
2. 110 நாடுகளில் மனித உரிமைகள் மீறப்பட்டதையொட்டி நடவடிக் கைகளை எடுத்தது.
3. 38 நாடுகளைப்பற்றி 76 செய்திகளை வெளியிட்டது.
4. 2219 புதிய கைதிகள் பற்றிய விடயங்கள் ஆய்விற்கு எடுக்கப் பட்டன.
5. 1801 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.
6. அவசர விடயங்களையொட்டி தனியாட்கள் அல்லது குழுக்கள் சார் பில் 217 உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
7. 33 நாடுகளில் 2173 கையேற்கும் குழுக்கள் இயங்கின.
8. 11 நாடுகளில் 200,000 தனி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் உள்ளனர்.
9. இந்நாடுகளில் 35 இல் தேசிய பிரிவுகள் உள்ளன.
10. கையேற்கப்பட்ட அல்லது புலனாய்விற்குட்படுத்தப்பட்ட கைதி களின் எண்ணிக்கை 4726 ஆகவிருந்தது.

## சித்திரவதைக்கெதிரான பிரச்சாரம்

சித்திரவதை செய்யப்படுவதை எதிர்ப்பதும் அதை ஒழிப்பதற் காகப் பிரச்சாரம் செய்வதுமே அனைத்துலக மன்னிப்புக் கழகத்தின் முக்கிய பணியாக விளங்குகின்றது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சித்திர வதையை ஒழிக்க வேண்டுமெனப் பிரச்சாரம் செய்தபோது இது எவ் வளவு தூரம் பரந்திருந்தது என்பதனைச் சிலரோ அல்லது நிறுவனங் களோதான் அறிந்திருந்தன. அத்துடன் உலகின் சில பகுதிகளில் சித்திரவதை முறை அதிகரித்துள்ளது என்பதனைப் பலர் அறியார். அனைத்துலக அடிப்படையில் தனியாட்கள் செயல்படின் இச்சித்திர வதைக்கெதிராக ஆற்றல்மிக்க சக்தியாக அமையும் என்ற அடிப்படை யிலேயே பிரச்சாரம் தொடங்கப்பட்டது. கடந்த 6 ஆண்டுளிகல் நாம் ஈட்டிய சில வெற்றிகள் எம் நம்பிக்கைக்கு மேலும் வலுவூட்டுகின்றன.

இதன் விளைவாக மக்களிடையே விழிப்புணர்ச்சி அதிகரித்துள்ளது. பாதிக்கப்பட்ட தனியாட்களுக்கு உதவிகிடைத்துள்ளது. இச்சித்திர வதையைத் தடுக்கப் பல அரசு சார்பற்ற அமைப்புக்கள் சில தகைமை களை எடுத்துரைத்ததுடன் சில வழிமுறைகளையும் எடுத்துரைத் துள்ளது.

எனினும் எம் பிரச்சாரம் போதியளவு நிறைவு பெற்றதாக அமையவில்லை. பல நாடுகளில் மிகக் கொடூரமான சித்திரவதை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. மேலும் உலகின் பல பாகங்களில் அரசியல் கைதிகளை விசாரிப்பதிலும் ஆட்சிக்கெதிரான எதிர்ப்பைத் தடுப்பதிலும் மிகக்கொடூரமான சித்திரவதைகள் உரு வாகிக் கொண்டிருக்கின்றன. இச்சித்திரவதை அரசுக்கெதிரானவர் களாலும், எதிர்ப்புக்குழுக்களாலும் நடத்தப்படுகின்றன.


மனிதாபிமானமற்ற சித்திரவதை தொடர்கின்ற வரையில் பிர சாரமும் தொடரும்.

## அவசரமான பரந்த நடவடிக்கைகள்

சித்திரவதையை ஒழிப்பதற்காக அனைத்துலக மன்னிப்புக் கழகம் மேற்கொண்ட பணிகளுள் சித்திரவதைக்காளாக்கப்படுபவர் என அச்சுறுத்தப்படும் பெயர் தெரிந்த தனியாட்கள் அனைவர் சார்பிலும் விரைந்த அனைத்துலக தலையீட்டை ஏற்படுத்துவதே தலையாய பணி யாக உள்ளது. (சி.ஒ.பி.) 1977 யூன் 1 ஆம் திகதிக்கும் 1978 மே 31ஆம் திகதிக்குமிடையில் 30 நாடுகளிலுள்ள ஆயிரத்துக்குமேற்பட்ட அனைத் துலக மன்னிப்புக் கழக உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் பாதிக்கப் பட்ட 362 தனியாட்களை ஒட்டியும் 22 பெரும் குழுக்களை ஒட்டியும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். எல்லா விடயங்களையும் ஒட்டி இவ்வழிமுறை எவ்வளவு தூரம் பயனு டையது என்பது பற்றி விரிவான தகவல் பெறுவது கடினம் எனினும் 1976 இல் இவ்வழக்குகளை ஒட்டிக் கிடைத்துள்ள புதிய தகவல் இவற் றின் ஆகக் குறைந்தது அரைவாசி விடயங்களைப் பொறுத்தவரையில், வேறு நிலைமை திருந்தியுள்ளது என்பதை அறியத்தக்கதாகவுள்ளது. 1977 இல் எடுக்கப்பட்ட வழக்குகளை ஒட்டியும் இத்தகைய மதிப்பீடு செய்யப்பட்டது. இவற்றில் 73 வீதமானவற்றைப் பொறுத்தவரை யில் புதிய தகவல் கிடைத்துள்ளது. இவற்றுள் அரைவாசிக்கு மேற் பட்டவற்றைப் பொறுத்தவரையில் சார்பான போக்குகள் உருவாகி யுள்ளன. சித்திரவதை நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சிறைக் கைதி விடுக்கப்பட்டுள்ளார் அல்லது தடுப்புக் காவலில் உள்ளார் என உத்தி யோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குடும்பமோ சட்டத் தரணிகளோ அவர்களைப் பார்ப்பதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மருத்துவ வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

## நாடுகள் எங்கும் பிரச்சாரம்

தனிப்பட்ட ஆட்களின் விடயங்களில் தலையிடுவதுடன் உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நாடுகளிலும் பல்வேறு கோட்பாடு உள்ள நாடுகளிலும் மனித உரிமைகள் திட்டமிடப்பட்டு மீறப்படுவதனைப் பற்றி பரந்த உலக அடிப்படையில் காலத்திற்குக் காலம் அனைத்துலக மன்னிப்புக் கழகம் பிரச்சாரத்தை நடத்துகின்றது. இந்தப் பிரச்சாரங்கள் பலவற்றில் சித்திரவதைவிடயமே கூடிய கவனத்தை எடுத்த விடயமாக விளங்கியது.



1976 ல் யுருகுகேயில் சித்திரவதை செய்யப்படும் முறை "கூர்மையான கம்பியில் இருத்தி வருத்தல்"

படம்: தனியுரிமை அனைத்துலக மன்னிப்புக் கழகம்.

## சித்திரவதைக்கெதிரான அனைத்துலக கோட்பாடுகள்

அனைத்துலகச் சட்டத்தினைத் திருத்துவதனாலும் அதனை சிறப்பாக நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளினாலும் சித்திரவதையைத் தடுக்க அனைத்துலக மன்னிப்புக் கழகம் முயலுகிறது. இத்துறையில் அனைத்துலக மன்னிப்புக் கழகம் சிறப்புத்துறை அமைப்புக்களுடனும் ஐக்கிய நாடுகள் ஐரோப்பாவின் அவை, அமெரிக்க நாடுகளின் அமைப்பு போன்ற அரசுகளுக்கிடையிலான குழுக்களின் ஒத்துழைப்புடனும் மிக நெருங்கிய ஒத்துழைப்புடன் மிக நெருக்கமாகப் பணிபுரிந்துள்ளது.

சித்திரவதை செய்தல் ஏனைய கொடூரமான மனிதத் தன்மையற்ற அல்லது கீழ்த்தரமான வழிமுறை அல்லது தண்டனை ஆகியவற்றிலிருந்து எல்லோரையும் பாதுகாக்கும்படி சாற்றல்.

(பிரகடனம்)

1975 டிசெம்பர் 9 ஆம் திகதி தீர்மானம் 3452 ஆக (XXX) ஐக்கிய நாடுகள் பொது அவையினுல் ஒரே உள்ளத்துடன் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

## உறுப்புரை 1

இந்த வெளிப்படுகையில் (பிரகடனம்) தேவைக்காக சித்திரவதை என்பது பின்வரும் முறையில் விளக்கப்பட்டுள்ளது. ஒருவரிடம் அல்லது 3வது ஆளிடம் தகவலை அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதற்கும், ஒருவர் செய்த குற்றத்தைத் தண்டிப்பதற்கும் ஒரு குற்றத்தை செய்ததாக ஐயுறவுகொண்ட நிலையிலும், அல்லது ஒருவரை அல்லது ஏனையோரை அச்சுறுத்துவதற்கும் ஓர் அரசு அலுவலாளரால் அல்லது அவரின் தூண்டுதலின் பேரில் கடும் நோவை அல்லது வருத்தல், அது உடலைப் பொறுத்ததாகவோ அல்லது உள்ளத்தைப் பொறுத்ததாகவோ இருக்கலாம். எனினும் திட்டமிடப்பட்டு வேண்டுமென்றே வருத்துவதனுல் ஏற்படுத்தப்படும் உடல் உள்ள துன்புறுத்தலை சித்திரவதை என இங்கு பொருள் கொள்ளப்படுகின்றது. எனினும் கைதிகளை எப்படி நடாத்தவேண்டும் என்ற ஆகக் குறைந்த ஒழுங்கு விதிகளுக்கேற்ப சட்ட இசைவுகளுக்கமையக் கைதிகள் விசாரணைக்குட்படுத்தப் படும்போது விசாரணையில் இயல்பாய் அமைந்துள்ள அல்லது அவற்றின் நிகழ்வுகளால் ஏற்படும் நோவோ துன்புறுத்தலோ இதனுள் அடங்காது.

அதிகரித்த திட்டமிடப்பட்ட கொடூரமான மனிதத் தன்மையற்ற முறையில் கீழ்த்தரமாக நடாத்தப்படுவதையே அல்லது தண்டிப்பதையே சித்திரவதை என விளக்கப்படுகின்றது.

## உறுப்புரை 2

எந்தவிதமான சித்திரவதையோ அல்லது கொடூரமான மனிதத் தன்மையற்ற அல்லது கீழ்த் தரமான நடத்தல் அல்லது தண்டித்தல் ஆகியவை மனிதனின் தன்மான உணர்விற்கு ஊறு செய்வதோடு ஐக்கிய நாடுகளின் பட்டயத்தின் நோக்கங்களை மறுப்பதாகக் கண்டிக்கப்பட்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனத்தில் எடுத்துரைக்கப் பட்ட மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் மீறுவதாகவும் கருதப்படும்.

## உறுப்புரை 3

சித்திரவதை அல்லது ஏனைய கொடூர மனிதத் தன்மையற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் அல்லது தண்டனை விதிப்பதற்கு எந்தவொரு அரசும் இசையவோ அல்லது விட்டுக்கொடுக்கவோ கூடாது. போர்ச் சூழ்நிலை அல்லது போர் ஏற்படக்கூடிய அச்சம் உள் நாட்டு அரசியல் அமைதியின்மை அல்லது எத்தகைய அவசரகால சட்டம் ஆகியவற்றைச் சித்திரவதை செய்தல் அல்லது துன்புறுத்த மனிதத்தன்மையற்ற அல்லது கீழ்த்தரமான முறையில் தண்டனை விதிப்பதை நியாயப்படுத்த புறநடையான சூழலில்கூட நடைமுறைப் படுத்த கொண்டுவரக்கூடாது.

## உறுப்புரை 4

பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வேற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு அரசும் தனது ஆதிக்கத்திற்குள் சித்திரவதை செய்தல் அல்லது ஏனைய கொடூரமான மனிதத்தன்மையற்ற கீழ்த்தரமான முறையில் அல்லது தண்டனை விதிப்பதைத் தடுக்க ஏற்ற வழிமுறைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

## உறுப்புரை 5

தம் உரிமை பறிக்கப்பட்ட மக்களுக்கும் பொறுப்பாயுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஆட்களுக்கும் பயிற்சி அளிப்போரும் மற்றும் ஏனைய அரச அலுவலர்களும் சித்திரவதைப்படுத்தல் அல்லது ஏனைய மனிதத் தன்மையற்ற அல்லது கீழ்த்தரமாக நடாத்தப்படல் அல்லது தண்டனை விதித்தல் ஆகியனவற்றை முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளன என்பதனை தம் கவனத்திற்கு கொள்வார்களாக. இத்தடை உத்தரவானது உரிய முறையில் தடுப்புக் காவலில் அல்லது ஏதாவது ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டோருக்கு பொறுப்பாக உள்ள எவருக்கும் அவரின் கடமைகள் தொழிற்பாடுகள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் மேற் குறித்த உத்தரவு பொது ஒழுங்கு விதிகளாகவும் அல்லது அறிவுறுத்தல்களாகவும் வழங்கப்படவேண்டும்.

## உறுப்புரை 6

ஒவ்வொரு அரசும் தனது எல்லைப்பரப்பில் சுதந்திரத்தை இழந்துள்ள ஆட்கள் தடுப்புக் காவலுக்கான ஒழுங்குகளுக்கோ அல்லது அதை ஒட்டிய ஏனைய நடவடிக்கைகளுக்கோ ஆளாக்கப்பட்டுள்ளோர் மீது நடாத்தப்படும் விசாரணைகளும் நடைமுறைகளும் ஒரு ஒழுங்கு முறையான ஆய்வின் கீழ் இருக்கவேண்டும். சித்திரவதை செய்வதையோ அல்லது ஏனைய கொடூரமான மனிதத் தன்மையற்ற கீழ்த்தரமான நடவடிக்கை அல்லது தண்டனை ஆகியன நிகழ்வதைத் தடுக்க மேற்குறித்த நடவடிக்கைகள் தேவை.

## உறுப்புரை 7

உறுப்புரை ஒன்றில் வரையறை செய்யப்பட்ட சித்திரவதை நடவடிக்கைகள் அனைத்தும் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றங்கள் என ஒவ்வொரு அரசும் உறுதிப்படுத்தவேண்டும். இதே வழிமுறை, சித்திரவதையில் கலந்து கொள்ளல், இசைவு கொடுத்தல், தூண்டுதல் சித்திரவதைக்கான முயற்சியில் ஈடுபடல் ஆகிய அனைத்து குற்றங்களுக்கும் பொருந்தும்.

## உறுப்புரை 8

எந்த ஒரு அரசியல் அலுவலாளரால் அல்லது அவரின் தூண்டுதலால் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான மனிதத் தன்மையற்ற கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கு அல்லது தண்டனைக்கு ஆளாக்கப்படும் எவராவது இவை பற்றி முறையிடுவதற்கும் உரிய அரசின் தகைமைவாய்ந்த அதிகாரிகளால் எதுவித பாகுபாடுமின்றி விசாரிக்கப்படுவதற்கும் உரித்துடையராவர்.

## உறுப்புரை 9

உறுப்புரை ஒன்றில் வரையறை செய்யப்பட்டவாறு சித்திரவதைச் செயல் நடைபெறுவதாக நம்புவதற்கு ஏற்ற சான்று கிடைக்குமாயின் அரசின் உரிய அதிகாரிகள் குறைப்பாடு இல்லாத நிலையிலும்கூட பாகுபாடற்ற புலனாய்வினை நடாத்தலில் உடனடியாக ஈடுபட வேண்டும்.


## உறுப்புரை 10

உறுப்புரை 8 அல்லது 9 இன் கீழ் நடாத்தப்பட்ட புலனாய்வின் காரணமாக உறுப்புரை 1 இன் கீழ் வரையறை செய்யப்பட்ட சித்திரவதை நடைபெற்றதாக உறுதிப்படுத்தப்படின் அந்நாட்டின் தேசிய சட்டத்திற்கு அமைய குற்றம் செய்தவர் அல்லது குற்றம் செய்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர் மீது குற்றவியல் வழக்குகள் நடாத்தப்படும். ஏனைய கொடூரமான மனிதத் தன்மையற்ற கீழ்த்தரமான நடவடிக்கைகள் அல்லது தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகச் சாட்டப்பட்ட குற்றச் சாட்டுக்கள் ஏற்றதென நிலைநாட்டப்படின் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளி அல்லது குற்றவாளிகள் மீது குற்றவியல் ஒழுங்கு நடவடிக்கைகள் அல்லது ஏனைய உரிய வழக்குகள் தொடரப்படும்;

## உறுப்புரை 11

எந்த ஒரு அரச அலுவலரால் அல்லது அவரின் தூண்டுதலால் சித்திரவதை அல்லது கொடூரமான மனிதத்தன்மையற்ற கீழ்த்தரமான நடவடிக்கை அல்லது தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக நிலைநாட்டப்பட்டிருப்பின் அந்நிலைக்காளாகியவருக்கு அந்நாட்டின் தேசிய சட்டத்திற்கு அமைய இடர் நீக்கம் அல்லது இழப்பீடு வழங்கப்படும்.

சித்திரவதை அல்லது ஏனைய கொடூரமான மனிதத்தன்மையற்ற கீழ்த்தரமான செய்கையின் விளைவாக உரிய ஆளிடம் அல்லது ஏனைய எந்த ஒரு ஆளிடமாவது வாக்கு மூலம் பெறப்பட்டதாக நிறுவப்படின் வழக்குத் தொடரப்படும்போது மேற்குறித்த கட்டாய நிலையில் பெறப் பட்ட வாக்குமூலம் மேற்குறித்தவர்களுக்கெதிரான சான்ருகக் கொள் ளப்படமாட்டாது.



நன்றி, படம்: சர்வதேச மன்னிப்புக்கழகம்



*The artwork is by Taeko Tomiyama.*

அனைத்துலக மன்னிப்புக் கழகமானது எந்த ஒரு அரசிற்கோ, அரசியல் சார்பிற்கோ கோட்பாட்டிற்கோ, பொருளாதார ஈடுபாட்டிற்கோ அல்லது சமயக் கோட்பாட்டிற்கோ உட்படாது தனித்தியங்கும் அனைத்துலக இயக்கமாகும். இது மனித உரிமைகள் தொழிற்பாட்டின் முழுத்தோற்றத்திற்கு உட்பட்ட நிலையில் ஒரு குறித்த பணியினை ஆற்றுகின்றது. இவ்வமைப்பின் செயற்பாடுகள், சிறப்பாக கைதிகளைப்பற்றி எடுத்துக்காட்டுவதாகும்.

- இவ் அமைப்பானது வன்முறையைப்பயன்படுத்தாத, அல்லது தூண்டாதநிலையில் ஆண்களோ பெண்களோ அவர்களின் நம்பிக்கைகள், நிறம், பால், இனத்தோற்றம், மொழி அல்லது சமயம் என்பவற்றின் பொருட்டு எங்காவது தடுத்து வைக்கப்பட்டிருப்பின் அவர்களது விடுதலைக்காக செயற்படும். இவர்கள் "மனச்சாட்சிக் கைதிகள்" என்று அழைக்கப்பட்டனர்.
- இவ்வமைப்பானது எல்லா அரசியல் கைதிகட்கும், விரைவானதும், நீதியானதுமான விசாரணைகளை விரைந்து நடாத்தும்படி வலியுறுத்துவதுடன் குற்றம் சுமத்தப்படாது அல்லது விசாரணையின்றி தடுப்புக்காவலில் வைத்திருக்கப்படும் அத்தகைய ஆட்களின் சார்பாக பணிபுரியும்.
- இவ்வமைப்பானது எல்லாக் கைதிகள் மீதும் விதிக்கப்படும் கொலைத் தண்டனையையோ, வதைத்தலையோ அல்லது ஏனைய கொடுமைகளையோ மனிதத்தன்மையற்ற மிகவும் தாழ்ந்திய நிலையில் வைத்திருத்தலையோ விதிக்கும் எத்தகைய தண்டனைகளையோ எதுவித பாகுபாடின்றி எதிர்க்கும்.

அனைத்துலக மன்னிப்புக் கழகமானது மனித உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அவையின் அனைத்துலக சாற்றுதல் அடிப்படையிலும் மற்றும் ஏனைய பன்னாட்டு அமைப்புக்களின் அடிப்படையிலும் தொழிற்படுகின்றது. அனைத்துலக மன்னிப்புக் கழகமானது அது பெற்றுள்ள ஆணையின் வரம்பிற்குள் உட்பட்டு கைதிகட்கான செய்முறைப் பணிகளில் ஈடுபடுவதன் வாயிலாக குடியியல், அரசியல், பொருளாதாரம் சமூக, பண்பாட்டுத் துறைகளில் மனித உரிமைகளை விரிவாக ஊக்குவிப்பதிலும் ஈடுபடுகிறது.

அனைத்துலக மன்னிப்புக் கழகம் 2000 இற்கு மேற்பட்ட இணைந்த குழுக்களையும் ஆபிரிக்காவில் 35 நாடுகளிலும், ஆசிய, ஐரோப்பா, மத்திய கிழக்கு, வட தென் அமெரிக்கா ஆகியவற்றில் தேசியப்பிரிவுகளையும் மேலும் 74 நாடுகளில் தனிப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு இணைந்த குழுவும், தனது நாடு நீங்கலாக ஏனைய நாடுகளில் ஆகக்குறைந்தது இரண்டு மனச்சாட்சிக் கைதிகளின் பொருட்டு பணிபுரிகிறது. சார்பற்ற தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக இந்நாடுகள் புவியியல் அரசியலில் ஒத்த நிலையிலுள்ளன. இலண்டனிலுள்ள அனைத்துலக மன்னிப்புக்கழக ஆராய்ச்சித் திணைக்களத்திலிருந்து கைதிகள் மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய செய்திகள் வெளியாகின்றன.

அனைத்துல மன்னிப்புக் கழகம், ஐக்கிய நாடுகள் (ஈசீஓஎஸ்ஓசீ), ஐக்கிய நாடுகளின் பொருளாதார சமூக பண்பாட்டு அமைப்பு, ஐரோப்பாவின் அவை, ஆகியவற்றுடன் மதிப்புரையை நாடும் தகைமையிலும், அமெரிக்க நாடுகளது அமைப்பின், மனித உரிமைகள் மீதான அமெரிக்க ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்பு தொடர்புகளும் ஆபிரிக்க, ஒற்றுமை அமைப்பிடம் (ஆபிரிக்க அகதிகளின் மீளமர்த்தலிற்கும், கல்விக்குமான பணியகம்) பார்வையாளர் தகைமையும் பெற்றுள்ளது.

அனைத்துலக மன்னிப்புக் கழகத்துக்கு உலகனைத்திலுமுள்ள உறுப்பினர்களின் கட்டணங்களாலும் நன்கொடைகளாலும் நிதியிடப்படுகிறது. அமைப்பின் தன்னுரிமையினைப் பாதுகாப்பதற்காக அனைத்துல மன்னிப்புக் கழகத்தின் அனைத்துலக அவையினால் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி எல்லா நன்கொடைகளும் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன் வரவு செலவுகள் ஆண்டுதோறும் நிதியறிக்கை வாயிலாக வெளியிடப்படுகின்றன.

சுவதேசி அச்சகம், 341, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10.